بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 7

இதழ் 3

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

16 ஜமாதிஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 20 சுல்ஹ் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
20 ஜனவரி 2022


## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ لِّمَنْ مَّا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ قُلْ لِّلّٰهِ ؕ كَتَبَ عَلٰى نَفْسِهِ الرَّحْمَةَ ؕ لَيَجْمَعَنَّكُمْ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ ؕ اَلَّذِيْنَ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ فَهُمْ لَا يُؤْمِنُوْنَ

வானங்களிலும், பூமியிலும் உள்ளவை எவனுக்குரியவை? என்று (அவர்களிடம்) நீர் கேட்பீராக. (இதற்கு அவர்கள் என்ன பதில் தரப் போகிறார்கள்? நீரே அவர்களிடம் அவை) அல்லாஹ்விற்குரியவை என்று கூறுவீராக. அவன் கருணையைத் தன் கடமையாகக் கொண்டுள்ளான். அவன் உங்களை நிச்சயமாக மறுமை நாள் வரையிலும் ஒன்று சேர்த்துக் கொண்டேயிருப்பான். இதில் ஐயமே இல்லை. தங்கள் வாழ்வை வீணாக்கியவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (6:13)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## அல்லாஹ்வின் திருப்தியில் மீது திருப்தி கொண்டு அவனது (இறை) நியதியை ஒப்புக் கொண்ட மக்கள் முழு மனதுடன் اناللہ وانا الیہ راجعون என்று கூறுகின்றார்கள்

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

சில சோதனைகள் வந்து விட்டால் சிலர் பதற்றமடைவதையும், இறைவன் மீது முறையீடு செய்வதையும் பார்க்கின்றோம். அவர்களது இயல்பில் ஒரு வகையான நிராசை காணப்படுகிறது. ஏனென்றால் இறைவனுடன் இருக்க வேண்டிய முழுமையான சமாதானம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இறைவனது கூற்றுகளை ஏற்றுக் கொண்டிருக்கின்ற வரை தான் இறைவனுடன் சமாதானம் இருக்க முடியும். இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். இறைவனுடனான விவகாரம் என்பது ஒரு நண்பனுடனான விவகாரத்தைப் போன்றதாகும். சில முறை ஒரு நண்பர் மற்ற நண்பரின் கூற்றை ஒப்புக் கொள்கின்றார். மற்றொரு நேரத்தில் இவர் அந்த நண்பரின் கூற்றை ஒப்புக் கொள்கின்றார். மகிழ்ச்சியுடனும் முழு மனதுடனும் இந்த சம்மதம் இருக்க வேண்டுமேயொழிய நிர்பந்தத்தால் இருக்கக் கூடாது. وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ (2:156) என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது சில முறை அச்சத்தாலும், பசியாலும், சில முறை செல்வத்தாலும், சில முறை கனிகள் போன்றவற்றின் இழப்பாலும் நாம் சோதித்துக் கொண்டிருப்போம். இந்த கனிகள் என்பதில் பிள்ளைகளும் அடங்கும். மேலும் ஒருவர் மிகவும் உழைப்புடன் தமது வயலை தயார் செய்கின்றார். திடீரென அதில் தீ பற்றிக் கொள்கின்றது. மேலும் நாசமாகி விடுகின்றது. அல்லது மேலும் பல விவகாரங்களில் உழைப்பும், முயற்சியும் செய்கின்றார். முடிவில் தோல்வியடைந்து விடுகின்றார்.

சுருக்கமாக, பல்வேறு வகையான சோதனைகள் மனிதனுக்கு வருகின்றன. இது இறைவனின் பரீட்சை ஆகும். அதுபோன்ற நிலைமைகளில் இறைவனின் திருப்தியில் திருப்தி கொண்டு அவனது நியதியை ஒப்புக் கொள்கின்ற மக்கள் முழு மனதுடன் اناللہ وانا الیہ راجعون என்று கூறுகின்றனர். அவர்கள் எந்த வகையான முறையீடும் செய்வதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 348 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

1643: உர்வா அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், நிச்சயமாக ஸஃபா மர்வா (என்னும் குன்றுகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளவை. எனவே (கஅபா என்னும்) பைத்துல்லாஹ்வை ஹஜ் அல்லது உம்ரா செய்பவர்கள் அவ்விரண்டையும் வலம் வருவது குற்றமில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஸஃபா மர்வாவுக்கிடையே வலம் வராவிட்டாலும் எவர் மீதும் குற்றமில்லை (என்பது இதிலிருந்து தெரிகிறது). இது குறித்து நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), என்னுடைய சகோதரனின் மகனே! நீர் மிக தவறான கூற்றை கூறியுள்ளீர். அந்த வசனத்தில் لَا جُنَاحَ عَلَيْهِ اَنْ لَّا يَتَطَوَّفَ بِهِمَا அவ்விரண்டையும் வலம் வராமலிருப்பது குற்றமில்லை என்றிருந்தாலே நீர் கூறும் கருத்து வரும். ஆனால் இவ்வசனம் அன்ஸாரி சஹாபிகளின் விஷயத்தில் இறங்கியதாகும். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் முன் அவர்கள் வணங்கி வந்த மனாத் என்னும் சிலைக்காக அவர்கள் இஹ்ராம் அணிந்து வந்தனர். ஹஜ் அல்லது உம்ராவிற்கு இஹ்ராம் அணியும்போது அந்த ஸஃபா மர்வாவை வலம் வருவது பாவமாகும் எனக் கருதினார்கள். எனவே இஸ்லாத்தை அவர்கள் ஏற்றதும் நபி (ஸல்) அவர்களிடம் இது பற்றி, இறைத்தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் ஸஃபா மர்வாவை வலம் வருவதைப் பாவமாகக் கருதி வந்தோம் எனக் கேட்டார்கள். அப்போது அல்லாஹ், நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளவை என்ற 2:158 வசனத்தை அருளினான். மேலும் நபி (ஸல்) அவர்கள் அவ்விரண்டுக்குமிடையே வலம் வருவதைச் செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள். எனவே அவ்விரண்டிற்குமிடையே வலம் வருவதை விடுவதற்கு யாருக்கும் அனுமதியில்லை எனக் கூறினார்கள். (சஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் அல்ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## وَاِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ لَا تُحْصُوْهَا ؕ اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ

## நீங்கள் அல்லாஹ்வின் அருட்களை எண்ணத் தொடங்கினால் உங்களால்அவற்றை கணக்கிட முடியாது

اَفَمَنْ يَّخْلُقُ كَمَنْ لَّا يَخْلُقُ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ○ وَاِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ لَا تُحْصُوْهَا ؕ اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ (6:18,19)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த வசனத்தின் பொருள்: படைப்பவன் படைக்காதவனைப்போன்று ஆக முடியுமா? படைக்காதவன் படைத்தவனைப் போன்று ஆகி விட முடியுமா? என்று இங்கு வந்திருக்க வேண்டும் என்று சில மக்கள் இந்த ஆட்சேபனையை எழுப்பினர். ஏனென்றால் (சொல் வழக்கில்) சிறியவரை உயர்ந்தவருக்கெதிரில் வைக்கின்றோமேயொழிய பெரியவரை சிறியவருக்கு எதிரில் வைப்பதில்லை. சிறுவன் பயில்வானைப் போன்று ஆகி விட முடியுமா? என்று வலிமையை வெளிப்படுத்துவதற்காக கூறலாம். ஆனால் பயில்வான் சிறுவனைப்போன்று இருக்க முடியுமா? என்று கூறுவதில்லை. இந்த ஆட்சேபனை முற்றிலும் சரியாகும். இந்த வசனத்தில் வல்லமையின் வெளிப்பாடு நோக்கமாக இருந்திருந்தால் படைக்காதவன் படைத்தவனுக்கு சமமாக இருக்க முடியுமா? என்றே வந்திருக்க வேண்டும். ஆனால் இந்த இடத்தில் இந்த கருத்து நோக்கம் அல்ல. அதாவது நீங்கள் அல்லாஹ்வின் அருட்களை எண்ணத் தொடங்கினால் உங்களால் அதனை கணக்கிட முடியாது. எனவே அவன் உங்களுக்கு ஏராளமான உலக அருட்களை வழங்கி இருக்கும்பொழுது எவ்வாறு ஆன்மீக அருட்களை வழங்காமல் இருப்பான்? எதற்கும் ஆற்றல் இல்லாத பொய் தெய்வங்களைப் போன்று அவன் ஊமையாகி அமர்ந்து விடவில்லை (என்று இந்த வசனத்தில் இறைவன் கூறுகின்றான்). இரண்டாவதாக, அவன் மீண்டும் மீண்டும் மன்னிக் கூடியவனாகவும், கருணை காட்டக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் நேர்வழி வழங்கவில்லையென்றால் பின்னர் பலவீனமானவர்களுக்கு மன்னிப்பும், தகுதி படைத்த மக்களுக்கு உரிய கண்ணியத்திற்குரிய ஏற்பாடும் எவ்வாறு நடைபெறும்? அவன் நேர்வழி வழங்குவதில் கவனமற்று இருந்தால் அத்துடன் அவனது கஃபூர் மற்றும் ரஹீம் என்ற பண்புகள் வீணாகி விடும். (நவூதுபில்லாஹ்) எனவே அவன் அவ்வாறு செய்ய மாட்டான்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 133 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு ஆரம்பமாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் ஆகும். உஸ்மான் பின் ஆமிர் என்பது அன்னாரின் தந்தையின் பெயராக இருந்தது. சுட்டுப் பெயர் அபூபக்ர் ஆகும். மேலும் அதீக், சித்தீக் என்ற சுட்டுப் பெயர்களும் அன்னார் (ரலி) அவர்களுக்கு இருந்தன. ஆமுல் ஃபீல் (என்ற அப்ரஹாவின் யானைப் படையினருடன் நிகழ்ந்த) சம்பவத்திற்கு 2 ஆண்டு 6 மாதம் கழித்து 573 ஆம் ஆண்டு அன்னார் (ரலி) பிறந்தார்கள். நான் கூறியது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் ஆகும். அன்னார் (ரலி) அவர்கள் பனு தைமின் மர்ரா என்ற குரைஷிய கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அறியாமை காலத்தில் அப்துல் காபா என்ற பெயரும் அன்னார் (ரலி) அவர்களுக்கு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை மாற்றி அப்துல்லாஹ் என பெயர் வைத்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் தந்தையின் பெயர் உஸ்மான் பின் ஆமிர் ஆகும். அபூ குஹாஃபா என்பது அன்னாரின் சுட்டுப் பெயராக இருந்தது. தாயாரின் பெயர் சல்மா பின்த் ஸஹர் பின் ஆமிர் என்பதாகும். உம்முல் கைர் என்பது அன்னாரின் சுட்டுப் பெயராக இருந்தது. ஒரு கூற்றின் அடிப்படையில் அன்னார் (ரலி) அவர்களின் தாயார் பெயர் லைலா பின்த் ஸஹ்ரா ஆகும்.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 145 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குடும்ப பாரம்பரியத்தில் 7 வது தலைமுறை முர்ராவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைகின்றது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் என்ற நூல் பக்கம் 57)

அபூ குஹாஃபா அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தையின் மனைவி உம்முல் கைரான் சிறிய தந்தையின் மகளாக இருந்தார்கள். (அர்ரூஸுல் அன்ஃப் தொகுதி 1 பக்கம் 430)

அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் அன்னாரின் தந்தையாரின் சிறிய தந்தையின் மகளாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெற்றோர்கள் தமது மகன் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் உயிருடன் இருந்தனர். அவர்கள் இருவரும் தனது மகன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சொத்தின் வாரிசாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு தான் அன்னாரின் தாயாரின் மரணம் முதலில் நிகழ்ந்தது.

(அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 314, 315 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தையின் மரணம் 14 ஹிஜ்ரியில் 97 வது வயதில் நிகழ்ந்தது.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 424 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தை மற்றும் தாயார் இருவருக்கும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு கிடைத்தது.

அன்னார் (ரலி) அவர்களின் தந்தையார் நம்பிக்கை கொண்ட சம்பவம் இவ்வாறு வருகின்றது. அன்னார் (ரலி) அவர்களின் தந்தையார் மக்கா வெற்றி வரை ஈமான் கொள்ளவில்லை. அந்நேரத்தில் அன்னாரின் பார்வை பறிபோய் இருந்தது. மக்கா வெற்றியின் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் நுழைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தந்தையாரை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை பார்த்தபோது அன்னார் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! நீங்கள் இந்த வயதான, முதிய நபரை வீட்டிலேயே இருக்க செய்திருக்கலாமே? நான் நேரில் அவரிடம் வந்திருப்பேனே? என்று கூறினார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர் தங்களது சமூகத்தில் ஆஜராகுவதும், தாங்கள் அவரிடத்தில் செல்லாமல் இருப்பதுமே சிறந்த விஷயமாகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அமர்த்தினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது நெஞ்சில் கை வைத்தார்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு அமைதி கிடைத்து விடும் என்று கூறினார்கள். எனவே அபூ குஹாஃபா அவர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 374, 375 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ குஹாஃபா மக்கா வெற்றி நாளன்று அழைத்து வரப்பட்டபோது அன்னாரின் தலை(முடி)யும், தாடியும் ஷகாமாவைப் போன்று வெண்மையாக இருந்தது. ஷகாமாவைப் பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது ஷகாமா என்பது மலைகளில் கிடைக்கும் ஒரு வெள்ளை நிறப் பூ ஆகும். எவ்வாறிருப்பினும் அன்னாரின் முடி முற்றிலும் வெண்மையாக இருந்தது. தாடியும் மிகவும் வெண்மையாக இருந்தது. அப்போது இதனை ஏதாவதொரு நிறத்தைக் கொண்டு மாற்றுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது அதில் சாயம் பூசுங்கள். நிறம் கொடுத்தால் சிறந்ததாகும். ஆயினும் கருப்பு நிறத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அதப் ஹதீஸ் எண் 3911 தொகுதி 11 பக்கம் 198, 199)

கருமை நிறம் ஒரு தீய நிறமாகும் என்பது இதன் பொருளல்ல. மாறாக வயது முதிர்ந்த இந்த நேரத்தில் கருமை நிற முடி முகத்திற்கு உகந்ததாக இருக்காது என்று அன்னார் (ஸல்) அவர்கள் ஒருவேளை எண்ணி இருக்கக் கூடும். எவ்வாறிருப்பினும் இதற்கு சாயம் பூச வேண்டும் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட ஆரம்ப கால மக்களைச் சார்ந்தவராக இருந்தார். சீரத் ஹல்பியா எனும் நூலில் இதன் குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னாரின் சஹாபிகளும் ஒளிந்து அல்லாஹ்வை இறைவணக்கம் செய்வதற்காக அன்னார் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு சென்று விட்டார்கள். அப்போது முஸ்லிம்களின் எண்ணிக்கை 38 ஆக இருந்தது. அந்த நேரத்தில் மஸ்ஜித் ஹராமிற்கு செல்ல வேண்டும் என்ற விண்ணப்பத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வைத்தார்கள். அபூபக்ரே! நமது எண்ணிக்கை குறைவாக உள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வலியுறுத்திக் கூறிக் கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அனைத்து தோழர்களுடனும் மஸ்ஜித் ஹராமிற்கு சென்று விட்டார்கள். அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு முன்னால் சொற்பொழிவு ஆற்றினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொற்பொழிவில் மக்களுக்கு அல்லாஹ்வின் பக்கமும், அவனது தூதரின் பக்கமும் அழைப்பு கொடுத்தார்கள்.

இவ்வாறு அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு (இஸ்லாத்தின்) முதல் சொற்பொழிவாளராக இருக்கின்றார்கள். அதாவது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்த முதல் சொற்பொழிவாளராக இருந்தார்கள். அப்போது இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும், முஸ்லிம்களையும் அடிப்பதற்காக

சூழ்ந்து கொண்டார்கள். மேலும் அவர்களை மிக மோசமாக தாக்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கால்களால் மிதித்தார்கள். மேலும் அன்னாரை மிகவும் அதிகமாக அடித்தார்கள்.

உத்பா பின் ரபீஆ என்பவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இரண்டு தோல்களால் செய்யப்பட்டிருந்த காலணிகளைக் கொண்டு அடித்துக் கொண்டிருந்தான். அவன் அந்த காலணிகளால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முகத்தில் எந்த அளவுக்கு அடித்தான் என்றால் முகம் வீங்கி விட்டதன் காரணமாக அன்னார் (ரலி) அவர்களின் முகத்தின் மூக்கு அடையாளம் காணப்பட முடியாமல் இருந்தது. பின்னர் பனூ தைம் கோத்திரத்தின் மக்கள் ஓடோடி வந்து இணை வைப்பவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து விலக்கினார்கள். பனூ தைம் கோத்திரத்தின் மக்கள் அன்னார் (ரலி) அவர்களை ஒரு துணியில் கிடத்தி தூக்கிக் கொண்டு சென்றார்கள். அன்னாரது வீட்டிற்கு அன்னார் கொண்டு செல்லப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்தில் அந்த மக்களுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. அந்த அளவிற்கு அவர்கள் அடித்திருந்தனர். அதன் பிறகு பனூ தைம் கோத்திரத்தின் மக்கள் திரும்பி வந்தனர். பள்ளிவாசலில் கஃபத்துல்லாஹ்வில் நுழைந்தனர்.

மேலும் கூறினர்: இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டால் நிச்சயமாக நாங்கள் உத்பாவை கொன்று விடுவோம். அவன் அதிகமாக அடித்திருந்தான். பின்னர் அந்த மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்களின் தந்தை அபூ குஹாஃபா மற்றும் பனூ தைம் மக்கள் அன்னார் (ரலி) அவர்களிடம் பேசுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் மயக்கத்தின் காரணமாக எந்த பதிலும் வழங்காமல் இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் பகலின் இறுதிப் பகுதியில் அன்னார் (ரலி) அவர்கள் பேசினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நிலைமை என்ன? என்றே முதன் முதலில் கேட்டார்கள். ஆனால் அவரது கேள்விக்கு மக்கள் பதிலளிக்கவில்லை. ஆயினும் அன்னார் (ரலி) (நிராகரிப்பாளர்களாகிய) அவர்கள் மீண்டும் மீண்டும் அதே கேள்வியை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னாரின் தாயார், இறைவன் மீது ஆணையாக! உமது தோழரைக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது தாயாரிடம், நீங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரியான உம்மே ஜமீல் பின்த் கத்தாப் அவர்களிடம் செல்லுங்கள் என்று கூறினார்கள். உம்மே ஜமீல் அவர்கள் முன்னரே முஸ்லிமாகி இருந்தார்கள். ஆயினும் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்ததை மறைத்து வைத்திருந்தார்கள். தாங்கள் அன்னாரிடம் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலைமையை விசாரியுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் உம்மே ஜமீல் அவர்களிடம் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), முஹம்மது பின் அப்தில்லாஹ் அவர்களைப் பற்றி கேட்கின்றார் என்று கூறினார்கள். அதற்கு நான் முஹம்மது அவர்களையும் அறிவதில்லை. அபூபக்ரையும் அறிவதில்லை என்று அவர் பதிலளித்தார். பின்னர் நான் தங்களுடன் வருவதை தாங்கள் விரும்புகின்றீர்களா? என்று உம்மே ஜமீல் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயாரிடம் கேட்டார்கள். அதற்கு அன்னார், ஆம்! என்று கூறினார்கள். பின்னர் அன்னார் அவருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அப்போது உம்மே ஜமீல் அவர்கள், அன்னார் (ரலி) அவர்களை உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு நிலத்தில் கிடப்பதைப் பார்த்து அழுதார்கள். மேலும் அன்னாருடன் எந்த மக்கள் இவ்வாறு நடந்து கொண்டனரோ அவர்கள் நிச்சயம் தீயவர்கள் ஆவர். மேலும் அல்லாஹ் அவர்களை பழிவாங்குவான் என்று நான் நம்புகின்றேன் என்றும் அன்னார் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கேட்டார்கள். உம்மே ஜமீல் அவர்கள் இதோ உமது தாயாரும் இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அப்போது உங்களது இரகசியத்தை அன்னார் வெளிப்படுத்த மாட்டார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமுடன் இருக்கின்றார்கள் என்று உம்மே ஜமீல் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்போது எங்கே உள்ளார்கள்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். தாரே அர்கமில் இருப்பதாக உம்மே ஜமீல் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருந்த உயர்வான அந்தஸ்தைப் பாருங்கள்! அன்னார் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டதும், இறைவன் மீது ஆணையாக! முதலில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகாத வரை நான் உணவும் உண்ண மாட்டேன். தண்ணீரும் குடிக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் கூறினார்கள்: நாங்கள் அவரை அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சிறிது நேரம் வரை தடுத்து நிறுத்தி வைத்தோம். அதாவது மக்கள் வீட்டை விட்டு வெளியேறுவது நின்று விடும் வரையிலும் மக்கள் வீட்டில் அமைதியாக உறங்கி விடும் வரையிலும் தடுத்து வைத்திருந்தோம். பின்னர் நாங்கள் அன்னார் (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். அன்னார் (ரலி) அவர்கள் எனது துணையுடன் நடந்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கடுமையான உருக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த நிலையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்தபோது, ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவருக்கு முத்தம் கொடுப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி குனிந்தார்கள். முஸ்லிம்களும் அன்னாரின் பக்கம் குனிந்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. எனக்கு எந்த துன்பமும் இல்லை. எனது வாயில் மக்கள் தடியால் அடித்தார்கள். அதைத் தவிர எனக்கு எந்த துன்பமும் இல்லை. இன்று எனது தாயார் தனது மகனுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளக் கூடியவர் ஆவார் என்று கூறினார்கள்.

இவை சுருக்கமான விஷயங்களாகும். அல்லாஹ் அன்னாரின் காரணமாக அவரை (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயாரை) நெருப்பிலிருந்து காப்பாற்றி விடுவதும் சாத்தியமாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தாயாரைக் குறித்து இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் தங்களின் காரணமாக அவரை நெருப்பிலிருந்து பாதுகாப்பது அதாவது அன்னார் ஈமான் கொள்வது சாத்தியமாகும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களின் தாயாருக்காக துஆ செய்தார்கள். மேலும் இஸ்லாத்தின் பக்கம் வரும்படி அன்னாருக்கு அழைப்பு கொடுத்தார்கள். அப்போது அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

(அஸீரத்துல் ஹல்பியா தொகுதி 1 பக்கம் 418, 419 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பிறப்பு குறித்து அறிவிப்புகள் கிடைக்கின்றன. அவற்றில் சஹாபாக்களின் வாழ்க்கை வரலாற்றை குறித்து நம்பத்தகுந்த ஒரு புத்தகமான இஸாபா என்ற நூலின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஆமுல் ஃபீல் சம்பவத்திற்கு 2 ஆண்டுகள் 6 மாதங்கள் கழித்து பிறந்தார்கள்.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 145 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் (ரலி) அவர்கள் ஆமல் ஃபீல் சம்பவத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார்கள் என்று தபரி வரலாற்று நூலிலும், தப்காத்துல் குப்ரா என்ற நூலிலும் எழுதப்பட்டுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 151 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சுட்டுப் பெயர்களும் உள்ளன. இரண்டு சுட்டுப் பெயர்கள் மிகப் பிரபலமானதாகும். அவை எடுத்துரைக்கப்படுகின்றன. ஒன்று அதீக் ஆகும். மற்றொன்று சித்தீக் ஆகும். அதீக் என்று பெயர் வைக்கப்பட்டதன் காரணம் என்ன? இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தபோது أَنْتَ عَتِيْقُ اللّٰهِ مِنَ النَّارِ என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பொருள்: நீர் அல்லாஹ்வின் புறமிருந்து நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டவர் ஆவீர். எனவே அந்த நாள் முதல் அன்னார் (ரலி) அவர்களுக்கு அதீக் என்ற சுட்டுப் பெயரும் வழங்கப்பட்டது.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண் 3679)

சில வரலாற்று ஆசிரியர்கள் சுட்டுப் பெயருக்கு பதிலாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயரை அதீக் என்றே

எடுத்துரைத்துள்ளார்கள். இது சுட்டுப் பெயரல்ல. மாறாக, இது அன்னாரின் இயற்பெயராக இருந்தது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இது சரியல்ல. எனவே அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி (ரஹ்) அவர்கள் தாரீகுல் குலஃபா எனும் நூலில் இமாம் நவதியின் ஆதாரத்தின் அடிப்படையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் ஆகும். இதுவே மிகவும் பிரபலமானதும், சரியானதும் ஆகும். அன்னார் (ரலி) அவர்களின் இயற்பெயர் அதீக் ஆக இருந்தது என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அதீக் என்பது அன்னாரின் சுட்டுப் பெயராக இருந்ததே தவிர அது அன்னாரின் இயற்பெயர் இல்லை என்று பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அதுவே சரியாகும்.

(தாரீகுல் குலஃபா பக்கம் 27 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

சீரத் இப்னு ஹிஷாம் நூலில் அதீக் என்ற சுட்டுப் பெயர் வழங்கப்பட்டதன் காரணம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது அன்னாரின் முகத்திலிருந்த அழகின் காரணமாகவும் அன்னார் (ரலி) அவர்களின் அழகு மற்றும் பொலிவின் காரணமாகவும் அன்னார் (ரலி) அவர்கள் அதீக் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா பக்கம் 117 – 2009 ஆம் ஆண்டு தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது)

சீரத் இப்னு ஹிஷாம் எனும் நூலின் விரிவுரையில் அதீக் என்ற சுட்டுப் பெயருக்கு கீழ்க்கண்ட காரணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதீக் என்பதன் பொருள் அல்ஹஸன் என்பதாகும். அதாவது அழகிய பண்புகளை கொண்டவர். எனவே அன்னார் குறைகளிலிருந்தும் குற்றங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர் என்று பொருள்படும். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் அதீக் என்று இந்த காரணத்தால் அழைக்கப்பட்டார்கள். அதாவது அன்னாரின் தாயாருக்கு எந்த குழந்தையும் உயிருடன் இருக்கவில்லை. எனவே தனக்கு குழந்தை பிறந்தால் அப்துல் காபா என்று பெயர் சூட்டுவதாகவும், மேலும் அதனை கஃபத்துல்லாஹ்விற்காக வக்ஃப் செய்து விடுவதாகவும் அன்னாரின் தாயார் வேண்டி இருந்தார்கள். இவ்வாறு அன்னார் உயிருடன் இருந்தார்கள். இளைஞர் ஆனார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் மரணத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்கள். அதன் அடிப்படையில் அதீக் என்ற பெயர் அன்னாருக்கு வழங்கப்பட்டது.

(அர்ரூஸுல் அன்ஃப் தொகுதி 1 பக்கம் 430)

இதுமட்டுமின்றி அதீக் என்ற சுட்டுப் பெயருக்கு இன்னும் பல்வேறு காரணங்கள் கிடைக்கின்றன. சில மக்களை பொறுத்தவரை அன்னார் (ரலி) அவர்கள் அதீக் என்று ஏன்? அழைக்கப்படுகின்றார்கள் என்றால் அன்னாரின் மீது குற்றம் சுமத்துகின்ற அளவில் அன்னாரின் குடும்பத்தில் எந்தவொரு விஷயமும் இல்லாமல் இருந்தது.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 963 – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அதீக் என்பதன் ஒரு பொருள் பழமையான அல்லது பழைய என்பதும் ஆகும். எனவே அன்னார் (ரலி) அவர்கள் தொன்று தொட்டே நன்மை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதீக் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள்.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 146 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதிலும், நன்மை செய்வதிலும் முந்திக் கொண்டதன் காரணமாகவும் அன்னாருக்கு அதீக் என்ற சுட்டுப் பெயர் வைக்கப்பட்டது.

(உம்தத்துல் காரி, கிதாபுல் பத்வுல் ஹுல்க் தொகுதி 16 பக்கம் 260 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் இரண்டாவது சுட்டுப் பெயர் சித்தீக் ஆகும். சித்தீக் என்று ஏன் பெயர் வைக்கப்பட்டது? என்பதன் காணரம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது.

அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி எழுதுகின்றார்கள்: சித்தீக்கை பொறுத்தவரை இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது அறியாமை காலத்தில் இந்த சுட்டுப் பெயர் அன்னார் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டது. அன்னாரிடமிருந்து வெளிப்பட்ட இந்த உண்மையின் காரணமாக வழங்கப்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களுக்கு என்னென்ன செய்திகளை கூறி வந்தார்களோ அதனை விரைவாக உண்மைப்படுத்தியதன் காரணமாக அன்னார் (ரலி) அவர்களுக்கு சித்தீக் என்ற சுட்டுப் பெயர் வழங்கப்பட்டது.

(ஜலாலுத்துன் சுயூத்தி அவர்கள் எழுதிய தாரீகுல் குலஃபா என்ற நூல் பக்கம் 28, 29 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இரவு நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தஸ் மஸ்ஜிது அக்ஸாவின் பக்கம் கொண்டு செல்லப்பட்டபோது (அதாவது இஸ்ராவின் சம்பவம் நிகழ்ந்தபோது) காலையில் மக்கள் அந்த சம்பவத்தைப் பற்றி பேசத் தொடங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்த சில மக்கள் இருந்தனர். அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களை ஆமோதித்திருந்தார்கள். ஆனால் பின்னர் விலகிக் கொண்டார்கள். அவர்களிடத்தில் சில பலவீனங்கள் இவ்வாறும் இருந்தன. அந்த நேரத்தில் இணை வைப்பவர்களை சார்ந்தவர்களில் சில மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஓடோடி வந்தார்கள். மேலும் தங்களுக்கு தங்களின் தோழரைப் பற்றி எதுவும் தெரியுமா? இரவில் தான் பைத்துல் முகத்தஸிற்கு கொண்டு செல்லப்பட்டதாக அன்னார் வாதம் செய்கின்றார்கள் என்று அவர்கள் கூறினர். ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்படி கூறியிருந்தால் நிச்சயம் அது உண்மையாகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது நீங்கள் அதனை உண்மைப்படுத்துகின்றீர்களா? இரவில் பைத்துல் முகத்தஸிற்கு சென்று விட்டு காலைக்குள் அன்னார் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள் என்பதை நீங்களும் உண்மைப்படுத்துகின்றீர்களா? ஏனென்றால் பைத்துல் முகத்தஸ் மக்காவிலிருந்து சுமார் 1300 கி.மீ தொலைவில் உள்ளதே? என்று மக்கள் கேட்டனர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஆம்! என்று கூறினார்கள். அதை விட தொலைவிலுள்ள ஓர் இடத்தைப் பற்றி கூறினாலும் அதனையும் நான் ஆமோதிப்பேன் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், காலையிலும், மாலையிலும் அன்னாரிடம் இறங்கக் கூடிய விண்ணின் கூற்றுகளையும் நான் உண்மைப்படுத்துகின்றேன் என்று கூறினார்கள். எனவே இதன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பெயர் சித்தீக் என்றானது. மேலும் அன்னார் சித்தீக் என்று அழைக்கப்பட்டார்கள்.

(அல் முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் லில்ஹாகிம் தொகுதி 3 பக்கம் 81 ஹதீஸ் எண் 4458 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை அபூவஹப் இவ்வாறு கூறுகின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த இரவில் நான் கொண்டு செல்லப்பட்டேனோ அதாவது இஸ்ரா சம்பவத்தின்போது ஜிப்ரீல் அவர்களிடம் நான் இவ்வாறு கூறினேன்: நிச்சயமாக எனது சமுதாயம் என்னை உண்மைப்படுத்தாது. அதாவது எனது கூற்றை உண்மை என ஒப்புக் கொள்ளாது என்று நான் கூறினேன். அப்போது يُصَدِّقُكَ اَبُوْبَكْرٍ وَهُوَ الصِّدِّيْقُ என்று ஜிப்ரீல் கூறினார்கள். அதாவது தங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மைப்படுத்துவார்கள். அன்னார் சித்தீக் ஆவார்கள். இவ்வாறு தப்காத்துல் குப்ரா நூலில் எழுதப்பட்டுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 127 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இஸ்ரா சம்பவம் நடந்தபோது மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஓடோடி சென்றார்கள். தங்களின் நண்பர் என்ன கூறுகின்றார் என்று தங்களுக்குத் தெரியுமா? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு அவர் என்ன கூறுகின்றார்? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த மக்கள் நான் இரவில் பைத்துல் முகத்தஸ் வரை சென்று வந்துள்ளதாக அன்னார் (ஸல்) அவர்கள் கூறுவதாக மக்கள் பதிலளித்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: மிஃராஜ் சம்பவத்தின் குறிப்பையும், அதனுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்திருந்தால் ஒரே சம்பவமாக இருந்திருக்கும். அதாவது ஒரே நேரத்தில் கூறியிருந்தால் அது ஒரே சம்பவமாக இருந்திருக்கும். அந்நிலையில் நிராகரிப்பாளர்கள் இந்த பகுதியின் மீது ஆட்சேபனை செய்திருப்பார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'தான்' இரவில் பைத்துல் முகத்தஸ் வரை சென்றதாக கூறுகின்றார்கள் என்று மட்டுமே அந்த மக்கள் கூறினர். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த கூற்றை உண்மைப்படுத்தியபோது அறிவுக்கு எதிரான இந்த விஷயத்தை தாங்கள் ஏற்றுக் கொண்டு

விடுவீர்களா? என்று மக்கள் கேட்டனர். அப்போது நான் காலையிலும், மாலையிலும் அன்னாரின் மீது வானத்திலிருந்து இறங்கக் கூடிய வசனங்களையும் ஒப்புக் கொள்கின்றேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 286)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சித்தீக் என்ற பட்டத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்களிடம் என்னென்ன முழுமையான சிறப்பம்சங்கள் இருந்தன என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மேன்மை என்பது அவரது உள்ளத்திலுள்ள விஷயத்தின் காரணமாக ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சீர்தூக்கிப் பார்த்தால் உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய உண்மைக்கு நிகரான உதாரணம் கிடைப்பது கடினமாகும். உண்மை இதுவாகும். அதாவது எல்லா காலத்திலும் சித்தீக்கின் சிறப்புகளை பெற வேண்டும் என்று ஆசைப்படும் மனிதனுக்கு அபூபக்ரின் நற்பண்புகளையும், இயல்புகளையும் தன்னிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கு இயன்ற அளவில் கடும் முயற்சி செய்ய வேண்டும். இது அவருக்கு அவசியமாகும். அதன் பிறகு முடிந்த வரை துஆவுடனும் செயல்படட்டும். எதுவரை ஒருவர் அபூபக்ரின் பண்பின் நிழலை தன்மீது ஏற்படுத்திக் கொள்வதில்லையே அதே வடிவில் ஆகி விடுவதில்லையோ அவருக்கு சித்தீக்கின் சிறப்புகள் கிடைக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 372, 373)

அதீக் மற்றும் சித்தீக் என்ற பட்டப் பெயர்களை தவிர்த்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இன்னும் பல்வேறு சுட்டுப் பெயர்களும் உள்ளன. அதாவது உதாரணமாக خَلِيْفَةُ رَسُوْلِ الله . ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா என்றும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

எனவே ஓர் அறிவிப்பில் நற்குறிப்பு வருகின்றது. ஒரு மனிதர் கலீஃபத்துல்லாஹ் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அழைத்தார். அதாவது அல்லாஹ்வின் கலீஃபாவே என்று அழைத்தார். அப்போது நான் கலீஃபத்தல்லாஹ் அல்லன். மாறாக, கலீஃபத்து ரஸூலில்லாஹ் ஆவேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதாவது நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பிரதிநிதி ஆவேன். மேலும் நான் அதிலேயே திருப்தி கொண்டுள்ளேன்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 137 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியின் விரிவுரையாளர் அல்லாமா பத்ருத்தீன் அய்னி அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கலீஃபத்துர் ரஸூலுல்லாஹ் என்ற சுட்டுப் பெயர் இருந்தது என்பதில் வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர்.

(அம்தத்துல் காரி, கிதாபுல் பத்வுல் ஹுல்க் தொகுதி 16 பக்கம் 260 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் கலீஃபாவாக ஆனதன் காரணமாக இந்த சுட்டுப் பெயர் வழங்கப்பட்டது என்பது வெளிப்படையாகும். எனவே இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வழங்கப்பட்ட சுட்டுப் பெயர் என்று நம்மால் கூற முடியாது. இது பிற்காலத்து விஷயமாகும். மக்கள் அன்னாருக்கு அந்த பெயரை சூட்டினார்கள். அல்லது அன்னார் (ரலி) அவர்கள் தமக்காக அந்தப் பெயரை விரும்பினார்கள்.

اَوَّاهٌ என்ற ஒரு சுட்டுப் பெயரும் உள்ளது. اَوَّ اهُ என்பதன் பொருள் என்னவென்றால், மிகவும் மென்மையான உள்ளம் கொண்டவர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அன்னாரின் மென்மை மற்றும் கருணையின் காரணமாக اَوَّ اهُ என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். இவ்வாறு தப்காத்துல் குப்ரா எனும் நூலில் எழுதப்பட்டுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 127 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

اَوَّاهٌ مُّنِيْب என்பதன் பொருள் மிகவும் மிருதுவான, மென்மையான உள்ளம் கொண்டவர். மேலும் குனியக் கூடியவர் என்பதாகும்.

தப்காத்தே குப்ரா எனும் நூலில் இவ்வாறு வருகிறது. நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். அன்னார் (ரலி) அவர்கள் கவனமாக கேளுங்கள் என்று மேடையில் கூறிக் கொண்டிருந்தார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறக் கேட்டேன். அன்னார் (ரலி) மேடையில் நின்று கொண்டு, கவனமாக கேளுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் மென்மையான மற்றும் மிருதுவான உள்ளம் படைத்தவரும், குனியக் கூடிய நபரும் ஆவார்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். கவனமாக கேளுங்கள். அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு நன்மையை விரும்பக் கூடியவரை வழங்கி இருந்தான். அதன் விளைவாக அன்னார் நலம் விரும்பியாக ஆகி விட்டார்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 127 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

اَمِيْرُ الشَّاكِرِيْن என்ற ஒரு சுட்டுப் பெயரும் இருப்பதாக கூறப்படுகின்றது. اَمِيْرُ الشَّاكِرِيْن என்பதன் பொருள் நன்றி கூறக் கூடியவர்களின் தலைவர் என்பதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அதிகமான நன்றியுணர்வின் காரணமாக اَمِيْرُ الشَّاكِرِيْن என்று அன்னார் அழைக்கப்பட்டார்கள்.

உம்தத்துல் காரி என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் اَمِيْرُ الشَّاكِرِيْن என்ற சுட்டுப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

(அமதத்துல் காரி, கிதாபுல் பத்வுல் ஹுல்க் தொகுதி 16 பக்கம் 260)

ثَانِيَ اثْنَيْنِ என்ற ஒரு சுட்டுப் பெயர் இருந்ததாகவும் கூறப்படுகிறது. அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ثَانِيَ اثْنَيْنِ என்ற சுட்டுப் பெயரால் அழைத்துள்ளான். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِلَّا تَنْصُرُوْهُ فَقَدْ نَصَرَهُ اللّٰهُ إِذْ أَخْرَجَهُ الَّذِيْنَ كَفَرُوْا ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ إِنَّ اللّٰهَ مَعَنَا فَأَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهٗ عَلَيْهِ

நீங்கள் இந்த தூதருக்கு உதவி செய்யாவிட்டாலும் கூட முன்னரே அல்லாஹ் அவருக்கு உதவி செய்து விட்டான். அதாவது மக்கள் அன்னாரை நிராகரித்தபோதும், நாட்டை விட்டு வெளியேற்றியபோதும் அவர்கள் இருவரும் குகையில் இருந்தபோதும் அல்லாஹ் உதவி செய்தான். அந்த நேரத்தில் துன்பப்பட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று அன்னார் (ஸல்) அவர்கள் தமது தோழரிடம் கூறிக் கொண்டிருந்தார்கள். எனவே அல்லாஹ் அவர் மீது தனது அமைதியை இறக்கினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: துன்பமான நேரத்திலும், கடினமான நிலைமையிலும் அல்லாஹ் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அன்னார் (ரலி) அவர்கள் மூலமாக ஆறுதல் நல்கினான். மேலும் அஸ்–சித்தீக், நபி ஸகலைன் போன்ற நெருக்கமான அந்தஸ்துகளை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியுள்ளான். மேலும் அல்லாஹ் அன்னாருக்கு ثَانِيَ اثْنَيْنِ என்ற சுட்டுப் பெயராலும் மேன்மையை வழங்கியுள்ளான். ثَانِيَ اثْنَيْنِ என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு நபரைப் பற்றி உங்களுக்கு தெரியுமா? நபியின் ஈருலக நண்பருக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் اِنَّ اللّٰهَ مَعَنَا என்பதன் அருளில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். உதவி வழங்கப்பட்ட இருவரில் அவரும் ஒருவர் என்று கூறப்பட்டுள்ளது.

திருக்குர்ஆனில் இதுபோன்று பாராட்டப்பட்ட வேறொரு நபரைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா? தனது மறைவான நிலையில் மன இச்சைகள் எனும் வட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நபரை நீர் அறிவீரா? மேலும் இறை சந்நிதானத்தை அடைந்த ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவர் இருக்கின்றார் என்று சந்தேகமற்ற விஷயங்களால் உறுதியாகி விடும் ஒரு நபர் இருக்கின்றாரா? இறைவன் மீது ஆணையாக! இதுபோன்று மிகத் தெளிவான குறிப்பால் மேலும் நிரூபணம் செய்யப்பட்ட ஆராய்ச்சியால் தெரிய வருவது என்னவென்றால் அந்த சிறப்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. நான் பைத்தே அதீக் இறைவனின் வேதங்களில் வேறு எவரையும் அவ்வாறு கண்டதில்லை. எனவே உங்களுக்கு எனது இந்த விஷயத்தை குறித்து சந்தேகம் இருக்குமென்றால் அல்லது நான் உண்மையிலிருந்து விலகி நிற்பதாக கருதினால் திருக்குர்ஆனிலிருந்து அதற்கு நிகரான உதாரணத்தை கொண்டு வாருங்கள். நீங்கள் உண்மையாளர் என்றால் திருக்குர்ஆனிலிருந்து இதுபோன்று தெளிவாக குறிப்புகள் இடம் பெற்ற வேறொரு நபரை கொண்டு வந்து காட்டுங்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 60, 63, 64)

சிர்ருல் கிலாஃபா எனும் நூலில் அன்னார் (அலை) அவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள்.

சாஹிபுர் ரஸூல் என்ற சுட்டுப் பெயரும் அன்னாருக்கு உள்ளது. அதன் பொருள் தூதரின் தோழர் என்பதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உங்களில் எவர் சூரா தவ்பாவை ஓதுவார் என்று ஒரு கூட்டத்தினரிடம் அன்னார் (ரலி) கூறினார்கள். நான் ஓதுகின்றேன் என்று ஒரு நபர் கூறினார். அப்போது அந்த நபர் إِذْ يَقُولُ لِصَاحِبِهِ لَا تَحْزَنْ (துன்பப்பட வேண்டாம் அந்த தோழர் தமது தோழரிடம் கூறிக் கொண்டிருந்தார்) என்ற வசனத்தை அடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த தோழராக இருந்தேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 56 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஆதமுஸ் ஸானி என்ற ஒரு சுட்டுப் பெயர் உள்ளது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கிய சுட்டுப் பெயராகும். அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஆதமே ஸானி (இரண்டாவது ஆதம்) என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கடிதத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாம் ஆதமாக இருக்கின்றார்கள். அதேபோன்று ஹஸ்ரத் உமர் ஃபாரூக் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களும் இருக்கின்றார்கள். மார்க்கத்தில் அந்த உண்மையான நம்பிக்கைக்குரியவர்கள் இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் இன்று திருக்குர்ஆனின் எந்தவொரு வசனத்தையும் கூட அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததாக கூறுவது நமக்கு மிகக் கடினமாக இருந்திருக்கும்.

(மக்தூபாத்தே அஹ்மத், தொகுதி 2 பக்கம் 151, கடிதம் எண் 2, மக்தூப் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் – ரப்வாவில் அச்சிடப்பட்டது)

சிர்ருல் கிலாஃபா எனும் நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதன் மொழியாக்கம் இவ்வாறாகும்: இறைவன் மீது ஆணையாக! அன்னார் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாவது ஆதம் ஆகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிகளின் முதல் வெளிப்பாடாகவும் இருந்தார்கள்.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 51, 52)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

அடுத்து கலீலுர் ரஸூல் என்ற ஒரு சுட்டுப் பெயர் உள்ளது. வாழ்க்கை வரலாற்று நூல்களில் கலீலுர் ரஸூல் என்ற பெயரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹதீஸ் நூல்களின் அடிப்படையில் இதற்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் ஒருவரை கலீலாக (நண்பராக) ஆக்கியிருந்தால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஆக்கி இருப்பேன்.

சஹீஹ் புகாரியில் வருகின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். மரணத் தருவாயில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மக்களிலிருந்து நான் ஒருவரை கலீலாக (நண்பராக) ஆக்கியிருந்தால் பின்னர் நிச்சயம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே ஆக்கியிருப்பேன். ஆனால் இஸ்லாத்தின் நட்பு எல்லாவற்றையும் விட சிறந்ததாகும். இந்த பள்ளிவாசலில் அபூபக்ரின் ஜன்னலைத் தவிர மற்ற அனைத்து ஜன்னல்களையும் என் புறமிருந்து அடைத்து வையுங்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண் 467)

நமது ஆய்வுக் குழுவினர் இங்கு இந்த கேள்வியை எழுப்பியுள்ளனர். அவர்களின் கேள்வியும் சரியானதுதான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவரை கலீலாக (நண்பராக) ஆக்கி இருந்தால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஆக்கி இருப்பார்கள் என்று கூறியதாக இந்த அறிவிப்பிலிருந்து நிரூபணமாகிறது. ஆனால் கலீலாக அன்னாரை ஆக்கவில்லையா? என்ற கேள்வி எழுகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரிடத்தில் இந்த விஷயத்திற்கு விளக்கம் வழங்கி விட்டார்கள். நான் ஒருவரை கலீலாக ஆக்க இருந்தால் பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஆக்கி இருப்பேன் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கு விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இந்த வாக்கியம் விளக்கத்திற்குரியதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அன்னார் (ஸல்) அவர்கள் நண்பராக ஆக்கி இருந்தார்கள். அவ்வாறிருக்க இதன் பொருள் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. அசல் விஷயம் என்னவென்றால் குல்லத் மற்றும் நட்பு என்பது நாடி நரம்புகளில் ஊடுருவி விடுவதாகும். அது அல்லாஹ்விற்கே உரிய சிறப்பம்சமாகும். அவனுக்கு மட்டுமே உரியதாகும். மற்றவர்களுடன் வெறும் சகோதரத்துவம் மட்டுமே இருக்கும். குல்லத் என்பதன் பொருள் அது உண்மையில் நுழைந்து விடுவது என்பதாகும். அதாவது குல்லத் என்பது நட்பின் உயர்தரமான வகையின் அடையாளம் ஆகும். அது ஓர் உயரிய அந்தஸ்தாகும். பொருள் என்னவென்றால், அல்லாஹ்வின் மீதான நேசத்தில் எவருக்கும் பங்கு இல்லை. எனினும் உலகில் ஒருவரை நண்பராக வைத்திருந்தால் பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை வைத்திருப்பேன். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய கூற்றின் பொருளாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 277)

அல்லாஹ் ஓர் உயரிய அந்தஸ்தில் இருக்கின்றான். அதுபோன்ற இடம் வேறு எவருக்கும் கிடைக்க முடியாது. ஆனால் அவ்வாறிருந்தும் உலகின் நட்பை பொறுத்தவரை அதில் ஒருவருடன் நட்பு இருக்குமென்றால் அது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடனான நட்பாகும். அதாவது நட்பு இருந்தது தான். ஆயினும் அல்லாஹ்வுடனான நட்புக்கு எதிரில் அதனை நட்பு என்று கூறிக் கொள்ள முடியாது. உலக மக்களுடன் அல்லாஹ்வுடனான நட்பைப் போன்று நட்பு கொள்வது ஒரு நபிக்கு அதிலும் குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சாத்தியமே இல்லாமல் இருந்தது. அது நடக்க முடியாத ஒன்றாக இருந்தது. உலகத்தின் அடிப்படையில் ஒரு விஷயத்திற்கு சாத்தியம் இருந்தது. எனவே அந்த அந்தஸ்திற்கு மிக அதிக தகுதி படைத்தவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் (ரலி) அவர்களின் குன்னிய்யத் பெயர் என்னவாக இருந்தது? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குன்னியத் பெயர் அபூபக்ர் ஆக இருந்தது. இதற்கு ஒன்றிக்கு அதிகமான காரணங்கள் கூறப்படுகின்றன. சிலரைப் பொறுத்தவரை இளம் ஒட்டகங்களை பக்ர் என்று கூறுவார்கள். அன்னாருக்கு ஒட்டகங்களை வளர்ப்பதிலும், அதனை பராமரிப்பதிலும் அதிக ஆர்வமும், நுபுணத்துவமும் இருந்தது. எனவே மக்கள் அன்னார் (ரலி) அவர்களை அபூபக்ர் என்று கூறத் தொடங்கி விட்டார்கள். பக்ர் என்பதன் ஒரு பொருள், விரைவாக செய்வது என்பதாகும். மேலும் முந்துதல் என்ற பொருளும் உள்ளது. அன்னார் எல்லாரையும் விட முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

إِنَّهُ بَكَّرَ إِلَى الْإِسْلَامِ قَبْلَ غَيْرِهِ

எனவே அன்னார் மற்றவர்களை விட இஸ்லாத்தை நோக்கி முதலில் அடியெடுத்து வைத்தார்கள். எனவே சிலரின் கூற்றின் அடிப்படையில் இந்த சுட்டுப்பெயர் அன்னாருக்கு வந்துள்ளது.

(பஷீர் ஷாஜித் அவர்கள் எழுதிய அஷ்ரா முபஷ்ஷிரா எனும் நூல் பக்கம் 41)

அல்லாமா ஸம்ஹஷ்ரி அவர்கள் எழுதியுள்ளார்கள்: தூய நற்பண்புகளின் காரணமாக அதாவது அன்னார் اِبْتِكَار என்ற தூய நற்பண்புகளில் முன்னனியில் இருந்ததன் காரணமாக அபூபக்ர் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள்.

(அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 390 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அன்னாரின் உருவ அமைப்பு தொடர்பாக அறிவிப்பு செய்கின்றார்கள். அன்னார் ஓர் அரபு மனிதரைப் பார்த்தார்கள். அவர் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அன்னார் தனது கூடாரத்தில் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த நபரை விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஒப்புமை கொண்ட வேறு எவரையும் கண்டதில்லை.

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: தாங்கள் எங்களுக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உருவ அமைப்பை எடுத்துரையுங்கள் என்று நாங்கள் கேட்டோம். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கோதுமை நிறம் கொண்ட மனிதராக இருந்தார்கள். மெலிந்த, ஒல்லியான நபராக இருந்தார்கள். கன்னங்களில் சதை குறைவாகவே இருந்தது. இடுப்பு சற்று விரிவாக இருந்தது. சற்று அது தாழ்ந்து இருந்தது. எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்களால் தமது ஆடையை இடுப்பில் சரிவர தாங்க முடியாமல் இருந்தது. அது கீழே வழுகிக் கொண்டே சென்றது. முகத்தில் குறைந்த சதை உடையவராக இருந்தார்கள். கண்கள் முன் பக்கமாக இருந்தன. நெற்றி உயரமானதாக இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 140 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவர் ஆணவத்தால் தமது ஆடையை பூமியில் இழுத்துக் கொண்டு சென்றாரோ அவரை அல்லாஹ் கியாமத் நாளன்று ஏறெடுத்து பார்க்க மாட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது எனது ஆடையின் ஒரு பகுதி லேசாக உள்ளது. அதாவது ஒரு பக்கம் இலேசாக உள்ளது. நான் அதன் பக்கம் சிறப்பான கவனம் வைக்கவில்லையென்றால் அது கீழ் இறங்கி விடுகின்றது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தாங்கள் ஆணவத்தால் அவ்வாறு செய்யவில்லையே! என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 3665)

இது ஆகுமானதாகும். அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மருதாணியினால் சாயம் பூசி வந்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 6073)

கதம் என்பது உயரமான மலைகளில் வளரும் ஒரு மூலிகை ஆகும். அது வஸ்மா என்ற பொருளுடன் சேர்த்து தடவப்பட்டது. இதன் மூலம் முடிகளுக்கு கருப்பு நிறம் கொடுக்கப்பட்டு வந்தது. (லிஸானுல் அரப்)

இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தொழில் மற்றும் குரைஷியர்களிடத்தில் அன்னாருக்கு இருந்த அந்தஸ்து ஆகியவற்றை குறித்து தப்ரி வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது சமுதாய மக்களுக்கு மத்தியில் ஒப்புக் கொள்ளப்பட்டவராகவும், நேசத்திற்குரியவராகவும் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் மென்மையான இயல்பு கொண்ட மனிதராக இருந்தார்கள். குரைஷிகளின் குடும்ப பாரம்பரியத்தையும், அவர்களின் நன்மை, தீமையையும் எல்லோரையும் விட அதிகம் அறிந்தவராகவும் அன்னார் (ரலி) இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் வியாபாரம் செய்யக் கூடிய மனிதராக இருந்தார்கள். நல்லொழுக்கங்கள் மற்றும் நன்மைகளுக்கு எஜமானராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் சமுதாயத்து மக்கள் ஒன்றை விட அதிகமான விஷயங்களின் காரணமாக அன்னார் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்களுடன் அன்பு கொண்டிருந்தார்கள். அதாவது அன்னார் (ரலி) அவர்களின் அறிவின் காரணமாகவும், அன்னார் (ரலி) அவர்களின் அனுபவத்தின் காரணமாகவும், அன்னார் (ரலி) அவர்களின் நல்ல சபைகளின் காரணமாகவும் மக்கள் வந்து சென்றனர். மேலும் அன்னார் (ரலி) மீது அன்பு கொண்டிருந்தனர்.

(தாரீக் திப்ரி தொகுதி 1 பக்கம் 540, 541 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஹம்மது ஹுஸைன் ஹேக்கல் அவர்கள் எழுதுகின்றார்கள்: குரைஷிகளின் முழு சமுதாயமும் வியாபாரத்தை தொழிலாக கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு நபரும் இதே பணியில் மூழ்கி இருந்தார். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் பெரியவராகி துணி வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். அதில் அன்னார் அசாதாரண முன்னேற்றம் அடைந்தார்கள். மேலும் மிக விரைவாக மக்காவின் மிகவும் வெற்றி பெற்ற வியாபாரிகளில் அன்னாரும் ஒருவராக கணக்கிடப்பட்டார்கள். வியாபார யுக்தியில் மனிதர்களை ஈர்க்கின்ற அன்னாரின் பார்வை, தன்னிகரற்ற நல்லொழுக்கமும் மிக முக்கிய பங்கு வகித்திருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா அபூபக்ர் சித்தீக் என்ற நூல் பக்கம் 41 – லாஹூரிலுள்ள குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வியாபாரத்தில் முதலீடு செய்திருந்த தொகை 40,000 திர்ஹமாக இருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் அதிலிருந்து அடிமைகளை விடுதலை செய்து வந்தார்கள். முஸ்லிம்களை கருத்தில் கொண்டு வந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது அந்த நேரத்தில் அன்னாரிடம் 5000 திர்ஹம்கள் மீதமிருந்தன.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 148 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாத்திற்கு முந்தைய சில சம்பவங்கள் உள்ளன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது பொருளாதார செழிப்பு மற்றும் உயர் நல்லொழுக்கத்தின் காரணமாக குரைஷிகளில் உயர் அந்தஸ்தை பெற்றவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் குரைஷிய தலைவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) ஆலோசனைகளை வழங்கக் கூடியவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் மிக அதிகமாக தூய மனிதராகவும், நன்மக்களைச் சார்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் தலைவராகவும், கண்ணியமிக்கவராகவும், வள்ளல் தன்மை கொண்டவராகவும், மிக அதிகமாக செல்வத்தை செலவிடக் கூடியவராகவும் இருந்தார்கள். மேலும் தமது சமுதாயத்தில் அனைவரின் அன்பைப் பெற்றவராகவும், நேசத்திற்குரியவராகவும் திகழ்ந்தார்கள். நல்ல சபைகளை கொண்டவராக இருந்தார்கள். கனவுகளுக்கு விளக்கம் கொடுப்பதில் அன்னார் (ரலி) அவர்கள் மக்களில் அதிக ஞானம் பெற்றவர்களாக இருந்தார்கள். அதாவது அன்னார் (ரலி) அவர்களுக்கு இதில் மிக அதிக ஞானம் இருந்தது.

கனவுகளுக்கு விளக்கம் கொடுக்கும் கல்வியில் மிகச் சிறந்த அறிஞரான இப்னு ஸீரீன் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த சமுதாயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கனவுகளுக்கு விளக்கம் கொடுப்பதில் சிறந்த அறிஞராக இருந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் மக்களில் எல்லோரையும் விட அதிகமாக அரேபியர்களின் குடும்ப பாரம்பரியத்தை அறியக் கூடியவராகவும் இருந்தார்கள்.

இந்த கலையிலும் குடும்ப பாரம்பரிய அறிவிலும் மிகச் சிறந்த இடத்தை அடைந்திருந்த ஜுபைர் பின் முஅத்தம் இவ்வாறு கூறினார்கள்: நான் குடும்ப பாரம்பரியத்தின் அறிவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். குறிப்பாக குரைஷிய குடும்பத்தினரின் பாரம்பரிய வழிமுறையை அன்னாரிடம் இருந்தே கற்றுக் கொண்டேன். ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குரைஷியர்களில் அனைத்து குடும்பத்தினரின் நன்மை மற்றும் தீமைகளையும் அறிந்திருந்தார்கள். மிக அதிகமான அறிவு படைத்தவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அவர்களின் தீமைகளை ஒருபோதும் குறிப்பிட்டதில்லை. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தீமைகளைப் பற்றி குறிப்பிட்டதில்லை. இதன் காரணமாக அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அகீல் பின் அபீ தாலிப் மக்களுக்கு மத்தியில் மிக அதிகமாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு குரைஷிகளின் பாரம்பரியம் மற்றும் அவர்களின் மூதாதையர்களின் நன்மை, தீமைகளைப் பற்றி எல்லோரையும் விட அதிகம் அறியக் கூடியவராக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்கள் குரைஷிகளை விரும்பாமல் இருந்தார்கள். ஏனென்றால் அன்னார் குரைஷிகளின் தீமைகளை கணக்கிட்டு விடுவார்கள். ஹஸ்ரத் அகீல் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியில் பரம்பரை பெயர்கள், அரேபியர்களின் சூழல்கள் மற்றும் சம்பவங்களின் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அமர்ந்து வந்தார்கள். மக்காவாசிகளின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களின் சிறந்த மக்களில் ஒருவராக இருந்தார்கள். எனவே அவர்களுக்கு எப்போதெல்லாம் ஏதாவது கஷ்டம் வந்ததோ அவர்கள் அன்னார் (ரலி) அவர்களிடமே உதவி தேடி வந்தார்கள்.

(அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 390 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்காவில் வசிக்கக் கூடிய அனைத்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

கோத்திரங்களும் கஃபாவை அடிப்படையாகக் கொண்டு ஏதாவதொரு பதவியை பெற்றிருந்தார்கள். ஏதாவதொரு பொறுப்பு அவர்களிடம் இருந்தது. ஹாஜிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்வது, அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது போன்ற பணிகள் பனூ அப்தே மனாஃப் கோத்திரத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. போர் நேரத்தில் கொடி ஏந்துதல், கஃபாவை பாதுகாத்தல், தாருன் நத்வாவிற்கான ஏற்பாட்டைச் செய்தல் போன்ற பணிகள் பனு அப்தே தார் கோத்திரத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. படைகளின் தளபதி பொறுப்பு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் கோத்திரமான பனூ மஹ்ரூமின் பங்கில் வந்தது. ஈட்டுத் தொகையை ஒன்று கூட்டுவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கோத்திரமான பனூ தைம் பின் முர்ராவின் பணியாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இளைஞரானபோது இந்த தொண்டு அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யிதுனா அபூபக்ர் சித்தீக் என்ற நூல் பக்கம் 59)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு விஷயத்தில் ஈட்டுத் தொகைக்கான தீர்ப்பு வழங்கும்போது குரைஷிகள் அன்னார் (ரலி) அவர்களின் கூற்றுகளை உண்மைப்படுத்தி வந்தார்கள். மேலும் அன்னாரின் ஈட்டுத் தொகையை அடிப்படையாக கருத்தில் கொண்டார்கள். அன்னாரை தவிர்த்து வேறொருவர் ஈட்டுத் தொகைக்கான தீர்ப்பை வழங்கினால் குரைஷிகள் அதனை புறக்கணித்து விடுவார்கள். அதை உண்மைப்படுத்த மாட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 311 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹில்ஃபுல் ஃபுலூல் எனும் இயக்கத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் பங்கு பெற்றிருந்தார்கள். இதில் ஏழைகளுக்கு உதவி, அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி என்ற சிறப்பான உடன்படிக்கை இருந்தது. நாம் எப்போதும் உரிமை படைத்தவருக்கு அவருக்குரிய உரிமையை பெற்றுக் கொடுப்போம். மேலும் அநீதியாளரை அநீதியிலிருந்து தடுப்போம் என்று அவர்கள் தங்களுக்குள் உடன்படிக்கை செய்திருந்தனர். பழைய காலத்தில் அரேபியர்களில் சில கண்ணியமான உள்ளம் படைத்த நபர்களுக்கே இந்த எண்ணம் தோன்றி இருந்தது. ஹக் என்பதற்கு ஃபஸ்ல் என்றும் கூறப்படும். அதன் பன்மை ஃபுலூல் ஆகும். எனவே இந்த உடன்படிக்கையின் பெயர் ஹில்ஃபுல் ஃபுலூல் என்று வைக்கப்பட்டது. சில அறிவிப்புகளில் இந்த காரணம் கூறப்படுகின்றது. இந்த ஆலோசனைக்கு காரணியாக ஒரு நபர் இருந்தார். அவர்களின் பெயர்களில் ஃபஸ்ல் என்ற சொல் வந்துள்ளது. எனவே ஹில்ஃபுல் ஃபுலூல் என்ற பெயரால் இந்த உடன்படிக்கை பிரபலமாகி விட்டது.

எவ்வாறிருப்பினும் ஹர்பே ஃபுஜ்ஜார் என்ற போருக்குப் பிறகு அதே போரின் தாக்கத்திற்கு உள்ளாகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் சுபைர் பின் அப்துல் முத்தலிப் அவர்களின் உள்ளத்தில் இந்த இயக்கத்தை மீண்டும் உயிரூட்ட வேண்டும் என்ற எண்ணம் உருவானது. எனவே இந்த இயக்கத்தில் சில குரைஷிய கோத்திரங்களின் பிரதிநிதிகள் அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பவரின் வீட்டில் ஒன்று கூடினார்கள். அங்கு அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் சார்பாக ஒரு விருந்திற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. பின்னர் நாங்கள் எப்போதும் அநீதியை தடுப்போம். அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வோம் என்று அனைவரும் ஒன்றுபட்டு தங்களுக்குள் சத்தியம் செய்து கொண்டனர். இந்த உடன்படிக்கையில் பங்கு பெறக் கூடிய பனூ ஹாஷிம், பனூ முத்தலிப், பனூ அஸத், பனூ ஸுஹ்ரா, பனூ தைம் ஆகிய கோத்திரங்கள் அடங்கியிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த இடத்தில் இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களும் உடன்படிக்கையில் பங்கு பெற்றிருந்தார்கள். அந்த வகையில் ஒரு முறை நபித்துவ காலத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: நான் அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பவரின் வீட்டில் ஒரு சட்டத்தில் சத்தியம் செய்தவாறு பங்கு பெற்றுள்ளேன். இன்று இஸ்லாத்தின் காலத்திலும் எவராவது ஒருவர் என்னை அதன் பக்கம் அழைத்தால் நான் அவரது குரலுக்கு செவிமடுப்பேன்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 104, 105)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹில்ஃபுல் ஃபுலூல் அமைப்பில் பங்கு பெற்றதை குறிப்பிட்டவாறு ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்: இந்த அமைப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் பங்கு பெற்றிருந்தார்கள்.

(முஹம்மது ஹுஸைஃபா லாஹூரி அவர்கள் எழுதிய செய்யிதுனா சித்தீக் அக்பர் (ரலி) கே ஷப் வ ரோஸ் பக்கம் 19)

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்பு அன்னார் (ரலி) அவர்களுக்கு அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்த தொடர்பு மற்றும் நட்பின் நிலை இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது. இப்னு இஸ்ஹாக் மட்டுமின்றி வேறு சில மக்களும் இவ்வாறு கூறியுள்ளார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் (நபித்துவ) தோற்றத்திற்கு முன்பாகவே அன்னாரின் தோழராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை, நேர்மை, அன்னார் (ஸல்) அவர்களின் தூய இயல்பு மற்றும் சிறந்த ஒழுக்கம் ஆகியவற்றை நன்கு அறிந்திருந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பிலும் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது அறியாமை காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழராக இருந்தார்கள்.

(அந்நதாயா வன்னஹாயா தொகுதி 2 பக்கம் 29, 32 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத்துஸ் சஹாபா என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: குழந்தைப் பருவம் முதலே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சிறப்பான அன்பும், தொடர்பும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பர்களின் வட்டத்தில் அன்னாரும் ஒருவராக இருந்தார்கள். பெரும்பாலும் வியாபார பயணங்களிலும் அன்னார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்ளும் கண்ணியமும் அன்னாருக்கு கிடைத்திருந்தது.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 56)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் (நபித்துவ) தோற்றத்தின் முந்தைய நட்பின் வட்டத்தை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் (நபித்துவ) தோற்றத்திற்கு முந்தைய காலத்தில் நட்பு ரீதியிலான தொடர்பின் வட்டம் மிகவும் குறுகியதாகவே தென்படுகிறது. உண்மையில் ஆரம்பம் முதலே அன்னார் (ஸல்) அவர்களின் இயல்பு தனிமையை விரும்பக் கூடியதாக இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் தமது வயதின் எந்தவொரு பகுதியிலும் மக்காவின் பொது சமூகத்துடன் மிக அதிகமாக கலந்து இணைந்து விடவில்லை. இருப்பினும் சில மக்கள் இருந்தனர். அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நட்பு ரீதியிலான தொடர்பும் இருந்தது. அவர்களில் தனித்தன்மை வாய்ந்தவராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதாவது அப்துல்லாஹ் பின் அபீ குஹாஃபா அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் குரைஷிகளின் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் தமது கண்ணியம் மற்றும் தகுதியின் காரணமாக சமுதாயத்தில் மிகவும் கண்ணியமான பார்வையுடன் பார்க்கப்பட்டு வந்தார்கள்.

இரண்டாவது இடத்தில் ஹகீம் பின் ஹிஸாம் இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மருமகனாக இருந்தார்கள். அன்னார் மிக கண்ணியமிக்க இயல்பு கொண்ட மனிதராக இருந்தார்கள். ஆரம்பத்தில் அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் அந்நிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிக அதிகமான அன்பும், கலப்படமற்ற தொடர்பும் வைத்திருந்தார்கள். இறுதியில் நற்பேறு பெற்ற இயல்பு அன்னாரை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்து வந்தது.

பின்னர் ஸைது பின் அம்ர் அவர்களுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொடர்புகள் இருந்தன. இந்த சகோதரர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரைஷிய உறவினராக இருந்தார். மேலும் அறியாமை காலத்திலேயே இணை வைத்தலிலிருந்து விலகி இருந்த மக்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள். மேலும் தம்மை இப்ராஹீமிய மார்க்கத்தைச் சார்ந்தவராக கூறி வந்தார்கள். ஆனால் அன்னார் இஸ்லாமிய காலத்திற்கு முன்பாகவே மரணமடைந்து விட்டார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூல் பக்கம் 114)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனான நட்பில் முதல் இடத்தை வகித்தார்கள். அறியாமை காலத்திலிருந்தே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஷிர்க்கின் மீது வெறுப்பு இருந்தது. மேலும் அதிலிருந்து விலகி இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறியாமை காலத்திலும் ஒருபோதும் ஷிர்க் வைத்ததில்லை. ஒருபோதும் எந்த சிலைக்கு முன்னாலும் சஜ்தா செய்தது கிடையாது.

எனவே சீரத் ஹல்பியா எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: நிச்சயமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒருபோதும் எந்த சிலைக்கும் சஜ்தா செய்தது கிடையாது.

அல்லாமா இப்னு ஜூஸி அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை, அறியாமை காலத்திலேயே சிலை வணக்கத்தை நிராகரித்த மக்களைச் சார்ந்தவர்களில் ஒருவராக கணக்கிட்டுள்ளார்கள். அதாவது அன்னார் (ரலி) அவர்கள் ஒருபோதும் சிலைக்கு அருகில் சென்றதில்லை.

(அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 1 பக்கம் 384, 385 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறியாமை காலத்தில் அன்னார் (ரலி) அவர்களுக்கு மதுவின் மீது வெறுப்பு இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறியாமை காலத்தில் மதுவை தம் மீது ஹராமாக்கிக் கொண்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அறியாமை காலத்திலும் மது அருந்தியதில்லை. இஸ்லாத்தின் நிலையிலும் ஒருபோதும் மது அருந்தியதில்லை.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 12 பக்கம் 490 மனாகிப் அபூபக்ர் ஹதீஸ் எண் 35609 – 1985 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளின் கூட்டத்தில் தாங்கள் அறியாமை காலத்தில் எப்போதாவது மது அருந்தினீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவூதுபில்லாஹ்! நான் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு என்ன காரணம்? என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் எனது கண்ணியத்தை பாதுகாத்தேன். மேலும் எனது பரிசுத்தத்தையும் பாதுகாத்து வந்தேன். ஏனென்றால் எந்த நபர் மது அருந்துகின்றாரோ அவர் தனது கண்ணியத்தையும், தூய்மையையும் வீணாக்கி விடுகின்றார் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் صَدَقَ اَبُوْبَكْرٍ - صَدَقَ اَبُوْبَكْرٍ என்று கூறினார்கள்.

பொருள்: அபூபக்ர் உண்மையை கூறியுள்ளார். அபூபக்ர் உண்மையை கூறியுள்ளார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு முறை கூறினார்கள்.

(தாரீகுல் குலஃபா பக்கம் 30 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது குறித்து பல்வேறு இடங்களில் அறிவிப்புகள் கிடைக்கின்றன. சில விளக்கமான அறிவிப்புகளும் உள்ளன. சில சுருக்கமான அறிவிப்புகளும் உள்ளன. எவ்வாறிருப்பினும் அவற்றையும் சிறிது கூறி விடுகின்றேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் எனது தாய், தந்தை இதே மார்க்கத்தில் அதாவது இஸ்லாத்தில் தான் உள்ளனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் காலை அல்லது மாலை இரண்டு நேரத்திலும் வருகை தராத எந்தவொரு நாளையும் நாங்கள் கடந்ததில்லை.

(சஹீஹுல் புகாரி, ஹதீஸ் எண் 2297)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஷரஹ் ஸர்கானி எனும் நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது. ஒரு நாள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹகீம் பின் ஹஸாம் என்பவரின் வீட்டில் இருந்தார்கள். அப்போது அன்னாரின் ஓர் அடிமைப் பெண் வந்தார். தனது கணவர் மூஸாவைப் போன்ற நபியாக அனுப்பப்பட்டுள்ளதாக கூறுவதாக உங்களது பெரியன்னை கதீஜா கூறினார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கிருந்து அமைதியாக வெளியேறி விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

(ஷரஹ் ஸர்கானி அலா மவாஹிபுத் துன்யா தொகுதி 1 பக்கம் 447, 448 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் இப்னு ஹஷாம் விளக்கவுரையான اَلرَّوْضُ الْاُنُف எனும் நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு கனவும், இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவமும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அதில் நிலவு மக்காவில் இறங்கி வந்திருப்பதாக அன்னார் கண்டார்கள். பின்னர் அது துண்டு துண்டாகி மக்காவின் எல்லா இடங்களிலும், வீடுகளிலும் பரவி விட்டதாகவும் அன்னார் அந்தக் கனவில் கண்டார்கள். அதில் ஒரு துண்டு எல்லா வீட்டிலும் நுழைந்து விட்டதாகவும் பார்த்தார்கள். பின்னர் அந்த நிலவு அன்னார் (ரலி) அவர்களின் மடியில் ஒன்று கூட்டப்பட்டு விட்டதாகவும் பார்த்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வேதத்தையுடைய சில அறிஞர்களிடம் இந்தக் கனவை குறிப்பிட்டார்கள். அப்போது எந்த நபிக்காக காத்திருக்கப்படுகின்றதோ அவரின் காலம் வந்து விட்டது. தாங்கள் அந்த நபியை பின்பற்றுவீர்கள். மேலும் இதன் காரணமாக மக்களில் எல்லோரையும் விட தாங்கள் அதிகமாக நற்பேறு பெற்றவராக இருப்பீர்கள் என்று அந்த கனவிற்கு விளக்கம் கூறப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தபோது அன்னார் (ரலி) தாமதிக்கவில்லை.

(ரவ்ஸுல் அன்ஃப் பக்கம் 431)

சுப்லுல் ஹுதா எனும் நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதற்கு காரணமாக வானத்திலிருந்து இறங்கிய ஒரு வஹீ அடிப்படையாக இருந்தது. அதன் விளக்கம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவிற்கு வியாபார நோக்கத்திற்காக சென்றிருந்தார்கள். அங்கு அன்னார் (ரலி) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அன்னார் அந்தக் கனவை வேதத்தையுடைய அறிஞர்களிடம் எடுத்துரைத்தார்கள். அப்போது தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்? என்று அந்த அறிஞர் கேட்டார். அதற்கு மக்காவிலிருந்து என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். மக்காவின் எந்த கோத்திரத்திலிருந்து? என்று அவர் கேட்டார். அதற்கு குரைஷிய கோத்திரம் என்று அன்னார் பதிலளித்தார்கள். தாங்கள் என்ன செய்கின்றீர்கள்? என்று அவர் கேட்டார். அதற்கு நான் வியாபாரி ஆவேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது ஒருவேளை அல்லாஹ் தங்களின் கனவை உண்மையாக்கினால் பின்னர் உங்களது சமுதாயத்திலிருந்து ஒரு நபி அனுப்பப்படுவார். நீங்கள் அந்த நபியின் வாழ்க்கையில் அவரது அமைச்சராக இருப்பீர்கள். மேலும் அவரது மரணத்திற்குப் பிறகு கலீஃபாவாக இருப்பீர்கள் என்று அந்த அறிஞர் கூறினார்.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை மறைவாக வைத்தார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் செய்கின்ற வாதத்திற்கு என்ன ஆதாரம் உள்ளது? என்று கேட்டார்கள். மற்ற இடங்களில் எந்த ஆதாரமும் ஒருபோதும் கேட்கவில்லை என்று வருகிறது. எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சிரியாவில் பார்த்த கனவு தான் அதற்கு சான்றாகும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கட்டி அணைத்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் கண்களுக்கு மத்தியில் முத்தம் கொடுத்தார்கள். மேலும் தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் கூறினார்கள்.

(சுபுலுல் ஹுதா தொகுதி 1 பக்கம் 127 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு கனவின் குறிப்பு இடம் பெற்றுள்ளது. ஆயினும் அந்த கனவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்ன கண்டார்கள்? என்பதன் விளக்கம் இந்த இடத்தில் பதியப்படவில்லை. இருப்பினும் சீரத் ஹலபிய்யா எனும் நூலிலிருந்து நிலவு துண்டு துண்டாகி கீழே விழுந்த அந்த கனவின் பக்கமே இது சுட்டிக் காட்டுகின்றது என்பது நமக்கு தெரிய வருகின்றது. அது பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. தற்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த அறிஞருக்கு முன்னால் செய்த கனவின் குறிப்பு வந்துள்ளது.

(அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 1 பக்கம் 391 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இது குறித்து மேலும் பல்வேறு அறிவிப்புகளை வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் குறிப்பிட்டார்கள். அது எதிர்வரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 டிசம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நற்குறிப்பு (கடந்த குத்பாவில்) நடைபெற்று வந்தது. இது தொடர்பாக மேலும் சில குறிப்புகள் உள்ளன. சில சம்பவங்கள் ஒன்றுபோல் இருக்கும். ஆனால் பல்வேறு கோணங்களில் அது எடுத்துரைக்கப்படுகின்றது. தற்போது நான் சிலவற்றை எடுத்துரைக்கின்றேன்.

அஸதுல் காபா எனும் நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் பற்றிய நற்குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்பு ஒரு முறை யமன் நாட்டிற்கு சென்றிருந்தேன். அஸத் என்ற கோத்திரத்தைச் சார்ந்த ஒரு முதியவரிடம் (அங்கு) விருந்தாளியாக தங்கினேன். அந்த நபர் ஓர் அறிஞராக இருந்தார். இறை வேதங்களை படித்திருந்தார். மேலும் அவருக்கு மக்களின் குடும்ப பரம்பரை பற்றிய அறிவில் நிபுணத்துவம் இருந்தது. அவர் என்னைப் பார்த்து நீர் ஹரம் நாட்டில் வசிப்பவராவீர் என்பது எனது எண்ணமாகும் என்று கூறினார். அப்போது நான் ஆம்! நாம் ஹரம் வாசியைச் சார்ந்தவன் ஆவேன் என்று கூறினேன். பின்னர் நான் உம்மை குரைஷியர் என்று கருதுகின்றேன் என்று அவர் கூறினார். ஆம்! நான் குரைஷியரைச் சார்ந்தவர் ஆவேன் என்று நான் கூறினேன். பின்னர் நீர் தீமி கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவீர் என்று நான் கருதுவதாக அவர் கூறினார். அதற்கு ஆம்! நான் தீம் பின் முர்ரா கோத்திரத்தைச் சார்ந்தவன் ஆவேன் என்று நான் கூறினேன். நான் அப்துல்லாஹ் பின் உஸ்மான் ஆவேன். நான் கஅப் பின் சஅத் பின் தீம் பின் முர்ராவின் சந்ததிகளைச் சார்ந்தவன் ஆவேன் என்று நான் கூறினேன்.

அப்போது அவர் உம்மைக் குறித்து தற்போது ஒரேயொரு விஷயம் தான் என்னிடத்தில் எஞ்சியுள்ளது என்று அவர் கூறினார்.

இங்கு அப்துல்லாஹ் பின் உஸ்மான் என்று பெயர் கூறப்படுகின்றது. எனது கருத்துப்படி அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு அப்துல்லாஹ் என்ற பெயரை சூட்டியிருக்கவில்லை. ஆயினும் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது.

எவ்வாறிருப்பினும் உம்மைக் குறித்து தற்போது என்னிடம் ஒரேயொரு விஷயம் மட்டுமே எஞ்சியிருக்கிறது என்று அவர் கூறினார். அது என்ன? என்று நான் கேட்டேன். அதற்கு அவர் நீர் உமது வயிற்றிலிருந்து ஆடையை விலக்கிக் காட்டும் என்று அவர் கூறினார். அதற்கு நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று கூறினேன். அல்லது நீங்கள் ஏன் அவ்வாறு விரும்புகின்றீர்கள்? என்பதை எனக்கு கூற வேண்டும் என்று நான் கூறினேன். அவர் கூறினார்: ஒரு நபி ஹரமில் தோன்றுவார் என்ற சரியான, உண்மையான அறிவை நான் பெற்றுள்ளேன். மேலும் ஓர் இளைஞரும், ஒரு பெரிய வயதுடைய நபரும் அவரது பணிகளில் அவருக்கு உதவி செய்வார்கள். இளைஞரைப் பொறுத்தவரை அவர் கஷ்டங்களை எதிர்கொள்ளக் கூடியவராகவும், கஷ்டங்களை தடுக்கக் கூடியவராகவும் இருப்பார். பெரிய வயதுடையவர் வெள்ளை நிறம் உடையவராகவும், மெலிந்த உடை கொண்டவராகவும் இருப்பார். மேலும் அவரது வயிற்றில் மச்சம் இருக்கும். மேலும் அவரது இடது தொடையில் ஓர் அடையாளம் இருக்கும் என்று அவர் கூறினார். மேலும் நான் உங்களிடத்தில் கூறியதை நீர் காட்டுவது உம் மீது அவசியமில்லையா? என்னிடமிருந்து மறைந்திருக்கின்ற அந்த அடையாளத்தைத் தவிர உம்மிடத்திலுள்ள ஏனைய அனைத்து பண்புகளும் என்னைப் பொறுத்தவரை முழுமையடைந்து விட்டன என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனவே நான் அவரிடம் எனது வயிற்றிலிருந்த ஆடையை அகற்றி காட்டினேன். அப்போது அவர் எனது தொப்புளிற்கு மேலிருந்த கரு மச்சத்தை பார்த்தார். அப்போது, கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! அவர் நீரே ஆவீர். நான் உமக்கு முன்னால் ஒரு விவகாரத்தை எடுத்துரைக்க இருக்கின்றேன். எனவே நீர் அது தொடர்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். அது என்ன? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் கூறினார்: எச்சரிக்கை! நேர்வழியிலிருந்து பின்வாங்கிக் விடக் கூடாது. முன்னுதாரணமான மற்றும் சிறந்த வழியை வலிமையுடன் பிடித்துக் கொள்ள வேண்டும். இறைவன் உங்களுக்கு வழங்கும் செல்வத்தைக் குறித்து இறைவனுக்கு அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் யமன் நாட்டில் எனது பணியை முழுமை செய்தேன். பின்னர் நான் அந்த முதிய நபரிடம் விடை பெறுவதற்காக அவரிடம் சென்றேன். அப்போது, நான் அந்த நபியின் அடையாளமாக கூறினேன் அல்லவா? நான் கூறிய அந்த அடையாளங்களை நீர் நினைவில் வைப்பீரா? என்று அவர் கேட்டார். ஆம்! என்று நான் கூறினேன். அப்போது அவர் சில அடையாளங்களை எடுத்துரைத்தார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பின்னர் நான் மக்காவிற்கு வந்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி இருந்தார்கள். பின்னர் உக்பா பின் அபீ முஅய்யத், ஷைபா, ரபிஆ, அபூஜஹில், அபூபுஹ்தரி மேலும் குரைஷியர்களின் ஏனைய தலைவர்கள் என்னிடத்தில் வந்தனர். அப்போது நான் உங்கள் மீது துன்பம் ஏதும் வந்து விட்டதா? அல்லது நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து வந்துள்ளீர்களே! ஏதும் சம்பவம் நிகழ்ந்து விட்டதா என்ன? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம்! அபூபக்ரே! மிகப்பெரும் சம்பவம் நிகழ்ந்து விட்டது. அபூதாலிபின் அனாதை தான் நபி என்று வாதிடுகின்றார். தாங்கள் இல்லையென்றால், பின்னர் நாங்கள் அவர் தொடர்பாக இன்னும் காத்திருக்க மாட்டோம். தற்போது நீங்கள் வந்து விட்டீர்கள். எனவே தற்போது இந்த விவகாரத்தில் தாங்களே எங்களது இலக்காக உள்ளீர்கள். மேலும் தாங்கள் எங்களுக்கு போதுமானவராவீர்கள் என்று கூறினர்.

அப்போது நான் நல்ல வழிமுறையில் அவர்களின் கூற்றை தவிர்த்து விட்டேன். மேலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பற்றி விசாரித்தேன். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களின் வீட்டில் இருப்பதாக கூறப்பட்டது. நான் சென்று கதவைத் தட்டினேன். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் வெளியில் வருகை தந்தார்கள். அப்போது முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களது குடும்ப வீட்டிலிருந்து வெளியேறி விட்டீர்கள். மேலும் தாங்கள் (ஸல்) தங்களது மூதாதையர்களின் மார்க்கத்தை விட்டு விட்டீர்கள் என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்ரே! நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். நான் உங்களுக்கும், உங்கள் அனைவருக்கும் நான் தூதராக உள்ளேன். எனவே என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.

அப்போது நான் தங்களின் இந்த வாதத்திற்கு என்ன ஆதாரம்? என்று நான் கேட்டேன். அதற்கு யமன் நாட்டில் எந்த முதியவரை நீங்கள் சந்தித்தீர்களோ அவரே சான்று என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

யமன் நாட்டில் நான் ஏராளமான முதியவர்களை சந்தித்துள்ளேன் என்று நான் கூறினேன். அதற்கு எந்த முதியவர் உங்களுக்கு அடையாளங்களை கூறினாரோ அந்த முதியவர் ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். என் அன்பிற்குரியவரே! தங்களுக்கு யார் இந்த செய்தியை கூறியது? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முந்தைய நபிமார்களிடம் வந்த மகத்துவமிக்க வானவர்கள் தான் என்று கூறினார்கள். அப்போது தாங்கள் தங்களுடைய கரத்தை நீட்டுங்கள். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை என்றும், தாங்கள் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்றும் நான் சாட்சியம் வழங்குகின்றேன் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

பின்னர் நான் திரும்பி விட்டேன். நான் இஸ்லாத்தை ஒப்புக்

கொண்டதன் காரணத்தால் மக்காவில் இரண்டு மலைகளுக்கு மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக மகிழ்ச்சியடைந்த நபர் வேறு யாராகவும் இருக்கவில்லை.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 312, 313 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது அஸதுல் காபாவின் ஆதாரமாகும். சில இடங்களில் சம்பவத்தை சிலர் மிகைப்படுத்தி கூறியிருக்கலாம். ஆனால் ஏராளமான விஷயங்கள் சரியாகவும் இருக்கின்றன.

ரியாலுன் நஸீரா எனும் நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறு பதியப்பட்டுள்ளது. உம்முல் மூமினீன் ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் நெருங்கிய மற்றும் தூய நண்பராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியபோது குரைஷிய மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் உமது தோழர் பைத்தியக்காரராகி விட்டார் என்று கூறினர் (நவூதுபில்லாஹ்). அவருக்கு என்னவாகி விட்டது? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது அவர் மஸ்ஜிது ஹராமில் மக்களை ஏகத்துவத்தின் பக்கம் அதாவது ஏக இறைவனின் பக்கம் அழைக்கின்றார். மேலும் அவர் தன்னை நபி என்று கூறுகின்றார் என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களிடம் இந்த விஷயத்தை அவர் கூறினாரா? என்று கேட்டார்கள். ஆம்! அவர் இந்த விஷயத்தை மஸ்ஜிது ஹராமில் கூறிக் கொண்டிருக்கின்றார் என்று மக்கள் கூறினர். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி சென்றார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் வீட்டின் கதவை தட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு முன்னால் வந்தவுடன், அபுல் காஸிமே! தங்களைப் பற்றி எனக்கு என்ன விஷயம் வந்துள்ளது? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது அபூபக்ரே! என்னைப் பற்றி உங்களிடம் என்ன விஷயம் வந்துள்ளது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு தாங்கள் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பதாகவும், மேலும் தங்களை அல்லாஹ்வின் தூதர் என்று தாங்கள் கூறுவதாகவும் எனக்கு விஷயம் வந்தடைந்துள்ளது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஆம்! அபூபக்ரே! நிச்சயமாக கம்பீரமும், கண்ணியமுமிக்க எனது இறைவன் என்னை நற்செய்தி வழங்குபவராகவும், எச்சரிக்கையாளராகவும் ஆக்கியுள்ளான். மேலும் என்னை இப்ராஹீம் அவர்களின் துஆவின் வெளிப்பாடாக ஆக்கியுள்ளான். மேலும் என்னை அனைத்து மனிதர்களின் பக்கமும் அனுப்பியுள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தங்களை ஒருபோதும் பொய் பேசி கண்டதில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்.

நிச்சயமாக தாங்கள் தங்களுடைய மகத்தான நேர்மை, கருணை மற்றும் நல்ல செயல்கள் ஆகியவற்றின் காரணமாக நபித்துவதிற்கு அதிக உரிமை படைத்தவர் ஆவீர்கள். தாங்கள் தங்களது கரத்தை நீட்டுங்கள். நான் தங்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரத்தை நீட்டினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினார்கள். மேலும் தாங்கள் எதனைக் கொண்டு வந்துள்ளீர்களோ அது உண்மையாகும் என்று ஒப்புக் கொண்டார்கள். எனவே அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைத்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த தயக்கமும் கொள்ளவில்லை. தாமதிக்கவும் இல்லை.

(ரியாஸுன் நஸர் தொகுதி 1 பக்கம் 84, 85 – 2014 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் யாரையெல்லாம் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தேனோ அவர்கள் தடுமாற்றம் அடைந்தனர். மேலும் மறுத்து விட்டனர். மேலும் தாமதித்து வந்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தவிர. நான் அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றி குறிப்பிட்டபோது அதிலிருந்து அவர் பின்வாங்கவும் இல்லை. மேலும் அது குறித்து அவர் தாமதிக்கவும் இல்லை.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 205, 206 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளான். நீர் பொய்யர் என்று நீங்கள் கூறினீர்கள். ஆனால் அபூபக்ர் என்னை உண்மையாளர் என்று கூறினார். மேலும் அவர் தமது உயிரையும், செல்வத்தையும் என் மீதான அனுதாபத்துடன் எனக்கு ஆதரவாக வெளிப்படுத்தினார். (சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில், ஹதீஸ் எண் 3661)

இது புகாரியின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் செய்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியில் எங்கோ சென்றிருந்தார்கள். திரும்பி வந்தபோது அன்னார் (ரலி) அவர்களின் ஒரு பணிப்பெண் அன்னாரிடம் இவ்வாறு கூறினார்: அதாவது தங்களின் தோழர் (நவூதுபில்லாஹ்) பைத்தியமாகி விட்டார். மேலும் அவர் விநோதமான விஷயங்களை பேசுகின்றார். மேலும் விண்ணிலிருந்து தம்மிடம் வானவர்கள் இறங்குவதாகவும் அவர் கூறுகின்றார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்போதே எழுந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை அடைந்து அன்னாரின் வீட்டின் கதவை தட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். அப்போது நான் தங்களிடம் ஒரேயொரு விஷயத்தை மட்டும் கேட்பதற்காக வந்துள்ளேன். இறைவனின் வானவர்கள் தங்களிடம் இறங்குவதாகவும், தங்களிடம் பேசுவதாகவும் தாங்கள் கூறினீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அன்னார் (ரலி) அவர்களுக்கு தடுமாற்றம் ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக விளக்கம் அளிப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்பட்டார்கள்.

பொதுவாக வரலாற்றில் இதே அறிவிப்பு தான் தொடர்ந்து வருகின்றது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: தாங்கள் (ஸல்) எந்த விளக்கமும் அளிக்க வேண்டாம். தாங்கள் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை கூறினீர்களா? இல்லையா? என்பதை மட்டும் எனக்கு கூறுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மீண்டும் வானவர்கள் எந்த வடிவத்தில் இருக்கின்றனர். மேலும் அவர்கள் எவ்வாறு இறங்குகின்றனர் என்று அன்னார் (ரலி) அவர்கள் கேள்வி கேட்கக் கூடும் என்ற எண்ணத்தில் முதலில் முன்னுரையாக சில விஷயங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ இல்லை! இல்லை! வேண்டாம். இந்த விஷயம் சரியா? என்று மட்டும் கூறவும் என்று கூறினார்கள். ஆம்! சரி தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது தங்கள் (ஸல்) மீது ஈமான் கொள்கின்றேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சான்றுகளை எடுத்துரைப்பதிலிருந்து நான் தங்களை ஏன் தடுத்தேன் என்றால் எனது ஈமான் கண்டு உணர்ந்ததின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும். மேலும் எனது ஈமான் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக் கூடாது என்பதால் ஆகும். ஏனென்றால் தங்களை உண்மையாளராகவும், நேர்மையாளராகவும் ஒப்புக் கொண்ட பிறகு வேறு எந்த சான்றிற்கும் அவசியம் இருப்பதில்லை. சுருக்கமாக, மக்கா வாசிகள் எந்த விஷயத்தை மறைத்தார்களோ அதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது செயலால் தெளிவாக்கி வெளிப்படுத்தி விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 251, 252)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றோரிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அன்னார் (ரலி) அவர்கள் அந்த சம்பவத்தை விளக்கி இருக்கின்றார்கள். எனவே வேறொரு கோணத்தில் இந்த சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஈமான் கொண்டது அற்புதமானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தாங்கள் நபித்துவ வாதம் செய்யுங்கள் என்று வஹீ இறங்கியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்காவின் ஒரு தலைவரின் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். அந்த தலைவரின் பணிப்பெண் வந்தார். மேலும் கதீஜாவிற்கு என்னவாகி விட்டது? என்று தெரியவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று தனது கணவரும் நபியாவார்கள் என்று அவர் கூறுவதாக அந்த பணிப்பெண் கூறினாள்.

மக்கள் இந்த செய்தியைக் கேட்டு சிரித்தனர். அதுபோன்ற பேச்சுக்களை பேசக்

கூடியவர்களை மக்கள் பைத்தியக்காரர் என்று கூறி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலைமைகளைப் பற்றி மிகவும் ஆழமாக அறிந்திருந்தார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் அப்போதே எழுந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் வாசலுக்கு வந்து விட்டார்கள். மேலும் தாங்கள் ஏதேனும் வாதம் செய்துள்ளீர்களா? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது ஆம்! அல்லாஹ் என்னை பூமியின் சீர்திருத்தத்திற்காக அனுப்பியுள்ளான் என்றும், ஷிர்க்கை அழிப்பதற்கு கட்டளை வழங்கியுள்ளான் என்றும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வேறு எந்த கேள்வியும் கேட்பதற்கு பகரமாக எனது தாய், தந்தை மீது ஆணையாக! நீர் ஒருபோதும் பொய் பேசியதில்லை. எனவே (தற்போது) நீர் இறைவன் மீது இட்டுக்கட்டுகின்றீர் என்பதை என்னால் ஏற்க முடியாது என்று பதிலளித்தார்கள். எனவே இறைவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. மேலும் தாங்கள் இறைவன் புறமிருந்து தூதராக உள்ளீர்கள் என்பதிலும் நான் ஈமான் கொள்கின்றேன் என்று கூறினார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நன்மை மற்றும் இறையச்சத்தைக் கொண்ட இளைஞர்களுக்கு புரிய வைக்கத் தொடங்கினார்கள். மேலும் 7 நபர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள். அவர்கள் அனைவரும் இளைஞர்களாக இருந்தனர். அவர்களின் வயது 12 முதல் 25 வரை இருந்தது.

(தவ்ரா யூரப், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 543, 544)

அடுத்து ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்தார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரேயொரு சான்றால் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அதன் பிறகு ஒருபோதும் அன்னாரின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து ஒரு நொடிப்பொழுதிற்கு கூட சந்தேகம் உருவாகவில்லை. அதே ஆதாரம் தான் இங்கு கூறப்படுகின்றது. சம்பவங்கள் சில முறை சற்று வேறுபட்டு விடுகின்றன.

அந்த ஆதாரம் இதுவாகும்: அதாவது அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குழந்தைப்பருவம் முதல் பார்த்துள்ளார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் பேசியதில்லை. ஒருபோதும் தீங்கிழைத்ததில்லை என்பதை அன்னார் (ரலி) அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் அசுத்தமான மற்றும் தீய விஷயங்கள் அன்னாரின் நாவிலிருந்து ஒருபோதும் வெளிவந்ததில்லை என்பதையும் அன்னார் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். இதை விட அதிகமாக ஷரீஅத் கூறுகின்ற அளவுகோலின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளராக கருதுவதற்கு அன்னார் (ரலி) வேறு எந்த ஷரீஅத்தையும் அறிந்திருக்கவில்லை. வேறு எந்தவொரு சட்டத்தையும் அவர்கள் பின்பற்றி இருக்கவில்லை. இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் யார்? அவரது உண்மைத்துவத்திற்கு என்ன சான்றுகள் உள்ளன? என்பது பற்றி அன்னாருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் பேசியதில்லை என்பதை மட்டும் அன்னார் அறிந்திருந்தார்கள்.

அன்னார் (ரலி) ஒரு பயணத்தில் சென்றிருந்தார்கள். அன்னார் திரும்பி வரும்போது வழியிலேயே யாரோ ஒருவர் உங்களது தோழர் (முஹம்மது (ஸல்)) நான் இறைவனின் தூதர் என்று கூறுகின்றார் என்று கூறினார். முஹம்மது (ஸல்) அவர்களா அவ்வாறு கூறியுள்ளார்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் ஆம்! என்று கூறினார். அப்படியென்றால் அவர் பொய் பேச மாட்டார். அவர் உண்மையைத்தான் கூறுகின்றார் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஏனென்றால் அவர் மனிதர்கள் தொடர்பாக ஒருபோதும் பொய் பேசாதபோது இறைவன் மீது ஏன் அவர் இட்டுக்கட்டுவார்? மனிதர்களுக்கு ஒருபோதும் அவர் துரோகம் செய்யாதபோது அவரது ஆன்மாவை நாசம் செய்கின்ற அளவிலான இவ்வளவு பெரிய துரோகத்தை அவர் எவ்வாறு செய்வார்? இந்த ஆதாரத்தின் காரணமாக மட்டுமே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டார்கள். மேலும் இதனை இறைவனும் ஏற்றுக் கொண்டு விட்டான்.

அந்த வகையில் அல்லாஹ் கூறுகின்றான்:

فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ اَفَلَا تَعْقِلُوْنَ

நான் உங்களுக்கு மத்தியில் ஒரு நீண்ட காலம் வாழ்ந்துள்ளேன். அதை பாருங்கள். அந்த வாழ்க்கையில் நான் ஒருபோதும் உங்களுக்கு துரோகம் செய்ததில்லை. அவ்வாறிருக்க நான் தற்போது இறைவனுக்கு எவ்வாறு துரோகம் செய்வேன்? இந்த ஆதாரத்தையே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அவர் தம்மை இறைவனின் தூதராக கூறுகின்றார் என்றால் அவர் உண்மையாளர் ஆவார். நான் அவரை ஏற்றுக் கொள்கின்றேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதற்குப் பிறகு அன்னாரின் உள்ளத்தில் ஒருபோதும் எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. அன்னாரின் உறுதிப்பாட்டிலும் ஒருபோதும் எந்த தடுமாற்றமும் ஏற்படவில்லை. அன்னார் மீது பெரும் பெரும் சோதனைகள் வந்தன. சொத்துகளையும், நாட்டையும் அன்னாருக்கு துறக்க நேரிட்டது. மேலும் தனது அன்பர்களை கொல்ல நேரிட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தில் ஒருபோதும் ஐயம் எழவில்லை.

(பைஅத் கர்னே வாலோன் கேலியே ஹிதாயத், அன்வாலுல் உலூம் தொகுதி 6 பக்கம் 76, 77)

பைஅத் செய்யக் கூடியவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த இடத்தில் வழிகாட்டல் வழங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுக்கு புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒப்புக் கொண்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சித்தீக் என்ற பட்டத்தை வழங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்களிடத்தில் என்னென்ன சிறப்பம்சங்கள் இருந்தன என்பதை அல்லாஹ் நன்கு அறிகின்றான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மேன்மை என்பது அன்னார் (ரலி) அவர்களின் உள்ளத்திலுள்ள விஷயத்தின் காரணமாக ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சீர்தூக்கிப் பார்த்தால் உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படுத்திய உண்மைக்கு நிகரான உதாரணம் கிடைப்பது கடினமாகும். உண்மை என்னவென்றால், சித்தீக்கின் சிறப்புகளை பெற வேண்டும் என ஆசைப்படுகின்ற ஒவ்வொரு நபரும் அபூபக்ரின் பண்புகளையும், இயல்புகளையும் தன்னால் இயன்ற வரை முயற்சி செய்து தன்னுள் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். பின்னர் முயற்சியுடனும், துஆவுடனும் பணி செய்ய வேண்டும். எதுவரை அபூபக்ரின் இயல்பின் நிழலை அவர் தன்னுள் ஏற்படுத்திக் கொள்ள மாட்டாரோ மேலும் அதே வடிவில் தன்னை ஆக்கிக் கொள்ள மாட்டோரோ அது வரை சித்தீக்கிய சிறப்புகளை அவரால் பெற முடியாது.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அபூபக்ரின் இயல்பு என்பது என்ன? இது குறித்து விரிவாக பேசுவதற்கும், உரையாடுவதற்கும் இது சந்தர்ப்பம் இல்லை. ஏனென்றால் அதை விரிவாக எடுத்துரைப்பதற்கு நிறைய நேரம் தேவைப்படும். நான் சுருக்கமாக ஒரு சம்பவத்தை எடுத்துரைத்து விடுகின்றேன். அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவத்தை வெளிப்படுத்தியபோது அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வியாபாரத்திற்காக சிரியாவிற்கு சென்றிருந்தார்கள். அன்னார் (ரலி) திரும்பி வந்தபோது வழியிலேயே ஒரு நபர் அன்னார் (ரலி) அவர்களை சந்தித்தார். அன்னார் (ரலி) அவர்கள் அந்த நபரிடம் மக்காவின் நிலைமைகளைப் பற்றி விசாரித்தார்கள். மேலும் புதிய செய்தி ஏதும் உள்ளதா? என்று கேட்டார்கள். மனிதன் பயணத்திலிருந்து தனது நாட்டிற்கு திரும்பும்போது தனது நாட்டை சார்ந்த ஒருவரை வழியில் சந்தித்தால் அல்லது தனது நாட்டின் நிலவரத்தை கேட்டு அறிவது என்பது பொதுவான விஷயமாகும். அதற்கு அந்த நபர் இவ்வாறு பதிலளித்தார். உமது தோழர் முஹம்மது (ஸல்) தன்னை தூதர் என்று வாதம் செய்துள்ளார். இதுவே புதிய செய்தியாகும் என்று அவர் கூறினார். அதைக் கேட்ட உடனேயே அவர் அவ்வாறு வாதம் செய்திருந்தால் நிச்சயமாக அவர் உண்மையாளர் ஆவார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்னார் (ரலி) அவர்களுக்கு எந்த அளவிற்கு நல்லெண்ணம் இருந்தது என்பது இந்த ஒரு சம்பவத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். அற்புதங்களுக்கு அவசியம் என்று அன்னார் கருதவில்லை. உண்மையும் இதுவே ஆகும். வாதியின் நிலைமைகளை அறியாதவரே அற்புதத்தை வேண்டுகின்றார். மேலும் அந்நிய தன்மை இருக்கும்போதும், மேலும் திருப்தி ஏற்படுவது அவசியம் என்று இருக்கும்போது தான் மனிதன் அற்புதத்தை வேண்டுவான். ஆனால் நிலைமைகளை முழுமையாக எந்த நபர் அறிந்திருக்கின்றாரோ அவருக்கு அற்புதத்தின் தேவை என்ன வந்து விட்டது?

சுருக்கமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழிப்பாதையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவ வாதத்தை செவியுற்று ஈமான் கெண்டு விட்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் மக்கா வந்தடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய

சமூகத்தில் ஆஜராகி தாங்கள் நபித்துவ வாதம் செய்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அப்போது ஆம்! அது சரிதான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் தங்களை உண்மைப்படுத்திய முதல் நபராவேன் என்பதற்கு தாங்கள் சாட்சியாக இருங்கள் என்று கூறினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அவ்வாறு கூறியது வெறும் பேச்சாக மட்டுமே இருக்கவில்லை. மாறாக, அன்னார் (ரலி) அவர்கள் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது செயலால் அதை நிரூபித்துக் காட்டினார்கள். மரணிக்கும் வரை அதை நிறைவேற்றினார்கள். மரணித்த பிறகும் கூட அன்னார் (ரலி) அவர்களின் தோழமையை விட்டு விடவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 372 – 374)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சூரா அர்–ரஹ்மானின் وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهٖ جَنَّتَانِ (அதாவது எவர் தமது இறைவனுக்கு அஞ்சுகின்றாரோ அவருக்கு இரண்டு சுவர்க்கங்கள் உள்ளன) என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உதாரணத்தை அன்னார் வழங்கி உள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பாருங்கள். அன்னார் சிரியா நாட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் ஒருவர் அன்னாரை சந்தித்தார். புதிய செய்தி ஏதும் உள்ளதா? என்று அவரிடம் அன்னார் (ரலி) விசாரித்தார்கள். வேறு எந்த புதிய செய்தியும் இல்லை. ஆயினும் உமது தோழர் முஹம்மது (ஸல்) நபித்துவ வாதம் செய்துள்ளார் என்று அந்த நபர் பதிலளித்தார். அப்போது, அவர் நபித்துவ வாதம் செய்திருந்தால் பின்னர் அவர் உண்மையாளர் ஆவார். அவர் ஒருபோதும் பொய் பேச மாட்டார் என்று அவரிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு சென்று விட்டார்கள். மேலும் தாங்கள் சாட்சியாக இருங்கள். நான் தங்கள் மீது முதன் முதலில் ஈமான் கொண்ட நபராக இருக்கின்றேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி கூறினார்கள். பாருங்கள்! அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எந்த அற்புதத்தையும் வேண்டவில்லை. வெறும் முந்தைய அறிமுகத்தின் அருளின் மூலமாகவே அன்னார் ஈமான் கொண்டு விட்டார்கள். எவருக்கு அறிமுகமே இருக்காதோ அவர்தான் அற்புதங்களை வேண்டுகின்றார். எவர் மிக நெருங்கிய தோழராக இருப்பாரோ அவருக்கு முந்தைய சூழல்களே அற்புதங்களாக இருக்கின்றன.

அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பெரும் பெரும் துன்பங்களை சந்திக்க நேரிட்டது. வகை வகையான துன்பங்களையும், மிகக் கொடூரமான வேதனைகளையும் சுமக்க நேரிட்டது. ஆனால் பாருங்கள்! எல்லோரையும் விட அதிகமாக அன்னாருக்கே துன்பம் கொடுக்கப்பட்டது. அன்னாரே மிக அதிகமாக தொல்லைகளுக்கு ஆளானார்கள். ஆயினும் முதன் முதலில் நபித்துவ அரியணையில் (அதாவது நபித்துவ வழியிலான கிலாஃபத் பதவியில்) அவர்களே அமர்த்தப்பட்டார்கள். அல்லாஹ் இங்கும் அன்னாருக்கே அந்த அருட்கொடையை வழங்கினான். மறு உலகிலும் சுவர்க்கம் கண்டிப்பாக கிடைக்கும். பகல் முழுவதும் இங்கும் அங்கும் அலைக்கழிக்கப்பட்டு சுற்றித்திரிந்து வந்த அந்த வியாபாரம் எங்கே இருக்கின்றது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதல் கலீஃபாவாக அன்னார் நியமிக்கப்பட்ட இந்த அந்தஸ்து எங்கே உள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 78, 79)

மற்றோரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதர்கள் இரண்டு வகைப்படுவர். ஒருவர் நற்பேறு பெற்ற இயல்பு படைத்தவர். அத்தகைய மனிதர் முதலிலேயே ஈமான் கொண்டு விடுகின்றார். இந்த மக்கள் பெரும் தொலைநோக்கு பார்வை கொண்டவராகவும், நுட்பமான பார்வை உடையவராகவும் இருக்கின்றார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். இரண்டாம் வகை (மக்கள்) முட்டாள்களாக இருக்கின்றனர். தலை மீது துன்பம் வந்து விழும்போதுதான் அவர்கள் கண் விழிக்கின்றனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 261)

அதாவது ஏதாவதொரு துன்பத்தில், கஷ்டத்தில் சூழப்படும்போதும் தண்டனை வரும்போதும் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? வேண்டாமா? என்று சிந்திக்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முதன் முதலில் நம்பிக்கை கொண்டது யார்? என்பது தொடர்பாகவும் விவாதம் நடக்கின்றது. வரலாற்றாசிரியர்களின் பார்வையில், ஆண்களில் முதன் முதலில் ஈமான் கொண்டது யார்? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களா? அல்லது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களா? அல்லது ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களா? என்ற விஷயத்தில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

(தாரீக் தப்ரி தொகுதி 1 பக்கம் 537 –540 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

சிலர் இந்த விவகாரத்திற்கு இவ்வாறு தீர்வு கண்டுள்ளனர். அதாவது சிறுவர்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், பெரியவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், அடிமைகளில் ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களும் முதன் முதலில் ஈமான் கொண்டார்கள் என்று கூறுகின்றனர்.

அந்த அடிப்படையில் அல்லாமா அஹ்மது பின் அப்தில்லாஹ் அவர்கள் இந்த அறிவிப்புகளை ஒப்புமைப்படுத்தி இவ்வாறு எழுதுகின்றார்கள்: முதன் முதலில் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஆண்களில் முதன் முதலில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஆயினும் அப்போது அன்னார் சிறுவராக இருந்தார்கள். அன்னாரின் வயதைக் குறித்து ஏற்கனவே குறிப்பு செய்யப்பட்டு விட்டது. அப்போது அன்னாருக்கு வயது 10 ஆக இருந்தது. அன்னார் தமது இஸ்லாத்தை மறைவாக வைத்திருந்தார்கள். முதன் முதலில் தனது இஸ்லாத்தை வெளிப்படுத்திய பருவமடைந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் பின் அபூ குஹாஃபா (ரலி) ஆவார்கள். விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமைகளில் முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்த நபர் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) ஆவார்கள். இது எந்த கருத்து வேறுபாடும் இல்லாத அனைவரும் ஏற்றுக் கொண்ட விஷயமாகும்.

(ரியாஸுன் நஸ்ர் தொகுதி 1 பக்கம் 89 – 2014 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இந்த விவாதத்தைக் குறிப்பிட்டவாறு கூறிய விஷயம் இவ்வாறாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மிஷனின் பிரச்சாரத்தை துவங்கியபோது முதன் முதலில் ஈமான் கொண்ட பெண்மணி ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் ஒரு நொடிப்பொழுதிற்கு கூட தாமதம் செய்யவில்லை. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு ஆண்களில் முதன் முதலில் ஈமான் கொண்டவர்கள் தொடர்பாக வரலாற்றாசிரியர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹஸ்ரத் அபூபக்ர் அப்துல்லாஹ் பின் அபீ குஹாஃபா அவர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றனர். சிலர் ஹஸ்ரத் அலி (ரலி) அல்லது ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: எம்மைப் பொறுத்தவரை இந்த சர்ச்சை வீணானதாகும். ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டைச் சார்ந்த நபராக இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் பிள்ளைகளைப் போன்று அன்னார் (ஸல்) அவர்களுடன் வசித்து வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியவுடன் அவர்கள் ஈமான் கொள்வது இயற்கையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த விஷயத்தை கூறுவார்களோ அதனை சிறுவர்களாக அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதிருந்தது. எனவே அந்த நேரத்தில் அவர்கள் அந்த விஷயத்தை இதுபோன்றே ஒப்புக் கொண்டிருக்கக் கூடும்.

தொடர்ந்து அன்னார் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: அந்த இரு சிறுவர்களையும் விட்டு விடுங்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முதன் முதலில் ஈமான் கொண்ட நபராக ஒன்றுபட்ட நிலையில் இருப்பார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவையில் ஹிஸ்ஸாம் பின் சாபித் அன்ஸாரி என்ற கவிஞர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்:

إِذَا تَذَكَّرْتَ شَجْوًا مِنْ أَخِيْ ثِقَةٍ
فَاذْكُرْ أَخَاكَ أَبَابَكْرٍ بِمَا فَعَلَا
خَيْرَ الْبَرِيَّةِ أَتْقَاهَا وَ أَعْدَلَهَا
بَعْدَ النَّبِيِّ وَ أَوْفَاهَا بِمَا حَمَلَا
اَلثَّانِيَ التَّالِيَ الْمَحْمُوْدَ مَشْهَدُهٗ
وَأَوَّلَ النَّاسِ مِنْهُمْ صَدَّقَ الرُّسُلَا

பொருள்: உமது உள்ளத்தில் எப்போதாவது உமது ஏதாவதொரு நல்ல சகோதரரைப் பற்றிய வேதனைக்குரிய நினைவு வந்தால் அப்போது உமது சகோதரர் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவிற் கொள்ளும். நினைவிற் கொள்ளத்தக்க அன்னாரின் சிறப்புகளின் காரணமாக அன்னாரை நினைவிற் கொள்வீராக. அன்னார் (ரலி) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மக்களில் அனைவரையும் விட அதிக இறையச்சம் கொண்டவரும், அதிகம் நீதியை விரும்புபவருமாக இருந்தார்கள். மேலும் அன்னார் எடுத்துக் கொண்ட பொறுப்புகளை மிக அதிகமாக நிறைவேற்றக் கூடியவராக இருந்தார்கள். ஆம்! தவ்ர் குகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த இரண்டாம் நபர் அதே அபூபக்ரே ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதில் அன்னார்

தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்கள். அவர் எந்த பணியை செய்தாலும் அதை அழகியதாக ஆக்கி விடுவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட மக்களில் அவரே முதன்மையானவராக இருந்தார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கண்ணியம் மற்றும் தகுதியின் காரணமாக குரைஷிகளில் மிகவும் மரியாதைக்குரியவராகவும், கண்ணியத்திற்குரியவராகவும் இருந்தார்கள். வேறு எந்த சஹாபிக்கும் கிடைத்திராத அந்தஸ்து இஸ்லாத்தில் அன்னாருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு நொடிப்பொழுது கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதத்தில் ஐயம் கொள்ளவில்லை. மாறாக, செவிமடுத்த உடனேயே ஒப்புக் கொண்டு விட்டார்கள். பின்னர் அன்னார் தனது முழு கவனத்தையும், தனது உயிரையும், தனது செல்வத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது மிக அதிகமாக அன்பு வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதலாவது கலீஃபாவாக ஆனார்கள். தமது கிலாஃபத் காலத்திலும் அன்னார் தன்னிகரற்ற தகுதிகளுக்கு சான்று பகன்றார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து பிரபலமான ஐரோப்பிய வரலாற்றாசிரியர் Sprenger என்பவர் இவ்வாறு எழுதுகின்றார்: முஹம்மது (ஸல்) அவர்கள் ஏமாறக் கூடியவராக இருந்திருக்கலாம். ஆனால் ஒருபோதும் ஏமாற்றக் கூடியவராக இருக்கவில்லை என்பதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டது சான்றாக உள்ளது. இன்னும் கூறப்போனால், உண்மையான உள்ளத்துடன் அன்னார் தம்மை இறைவனின் தூதர் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சர் வில்லியம் மூர் என்பவருக்கும், Sprenger-ன் இந்த கருத்துடன் உடன்பாடு உள்ளது என்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 121, 122)

இஸ்லாமிய பிரச்சாரம் மற்றும் அதன் விளைவாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு என்னென்ன சோதனைகளை கடக்க நேரிட்டது? என்பது பற்றி அஸதுல் காபா எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது இஸ்லாம் தோன்றியபோது அன்னார் (ரலி) அவர்கள் முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு கூட்டம் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது. அந்த மக்களுக்கு அன்னார் (ரலி) அவர்கள் மீது அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீதிருந்த அன்பின் காரணமாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அவர்களுக்கு இருந்த அந்த ஈர்ப்பின் காரணமாக அந்தக் கூட்டம் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது. எந்த அளவுக்கென்றால் (சொர்க்கத்திற்கான) நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களில் ஐந்து நபித்தோழர்கள் அன்னார் (ரலி) அவர்களின் மூலமாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 205 அப்துல்லாஹ் பின் உஸ்மான் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பிரச்சாரத்தால் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி), ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), யஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) ஆகியோர் அடங்குவர்.

(சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 166 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் கதீஜா (ரலி), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) ஆகியோருக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஐந்து நபர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பிரச்சாரத்தால் ஈமான் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் அனைவரும் இஸ்லாத்தில் மிகவும் கண்ணியமிக்க, உயர் அந்தஸ்தைப் பெற்ற சஹாபிகளாக இருந்தார்கள். மேலும் பெரும் சஹாபிகளில் அவர்கள் கணக்கிடப்பட்டார்கள்.

அவர்களின் பெயர்கள் இவ்வாறாகும்: முதலாவதாக பனூ உமைய்யா குடும்பத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது அன்னாருக்கு வயது 30 ஆக இருந்தது. அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூன்றாவது கலீஃபாவாக ஆனார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் வெட்கமுடையவராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும், மென்மையான உள்ளம் படைத்தவராகவும், செல்வந்தராகவும் இருந்தார்கள். எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னார் இஸ்லாத்திற்கு பெரும் பெரும் பொருளாதார தொண்டுகளை ஆற்றி வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த அன்பை இந்த விஷயத்திலிருந்து கணித்துக் கொள்ள முடியும். அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் அவருக்கு ஒருவருக்குப் பிறகு ஒருவர் என தனது இரண்டு மகள்களை திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். அதன் காரணமாக அன்னார் (ரலி) அவர்கள் துன்நூரைன் (இரு ஒளிகளைக் கொண்டவர்) என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இரண்டாவதாக, பனூ ஸுஹ்ரா குடும்பத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாயார் எந்த குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்களோ அந்த குடும்பத்தைச் சார்ந்தவராக அன்னார் இருந்தார்கள். மிகவும் புரியும் தன்மை கொண்ட நபராகவும், மிகவும் பக்குவமடைந்த இயல்பைக் கொண்ட மனிதராகவும் அன்னார் இருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் தேர்வு குறித்த கேள்வி அன்னாரின் கரங்களின் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நேரத்தில் அன்னாரின் வயது சுமார் 30 ஆக இருந்தது. உஸ்மானிய கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் மரணித்தார்கள்.

மூன்றாம் நபர், அந்த நேரத்தில் முற்றிலும் இளைஞராக இருந்த ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) ஆவார்கள். அதாவது அந்த நேரத்தில் அன்னாரின் வயது 19 ஆக இருந்தது. இவரும் பனூ ஸுஹ்ரா குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மிகவும் தைரியசாலியாகவும், வீரராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அன்னாரின் மூலமாகவே ஈராக் வெற்றி கொள்ளப்பட்டது. அமீர் முஆவியா (ரலி) அவர்களின் காலத்தில் அன்னார் மரணமடைந்தார்கள்.

நான்காம் நபர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரியன்னையின் மகனான ஹஸ்ரத் சுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் பனூ அஸத் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நேரத்தில் அன்னாரின் வயது வெறும் 15 ஆக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ்ப் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஒரு சிறப்பான தொண்டாற்றியதன் காரணமாக அன்னாருக்கு ஹவாரி என்ற பட்டத்தை வழங்கினார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஒட்டகப் போருக்குப் பிறகு ஷஹீதானார்கள்.

ஐந்தாவது நபர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த அதாவது பனூ தைம் கோத்திரத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் அந்த நேரத்தில் முற்றிலும் இளைஞராக இருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் இஸ்லாத்தின் மீது சிறப்புமிக்க அர்ப்பணிப்பு கொண்ட நபர்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஒட்டகப் போரில் ஷஹீதானார்கள்.

இந்த ஐந்து சஹாபிகளும் அஷ்ர முபஷ்ஷிரா என்ற குழுவைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய நாவினால் குறிப்பாக எவர்களைக் குறித்து சுவர்க்கத்திற்குரிய நற்செய்திகளை வழங்கி இருந்தார்களோ அந்த பத்து சஹாபிகளில் அடங்குவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் நெருக்கமான சஹாபிகளாகவும், ஆலோசனை வழங்கக் கூடிய சஹாபிகளிலும் அவர்கள் கணக்கிடப்பட்டு வந்தார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 122, 123)

மக்கத்து காஃபிர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர்கள் மீது பல வகையான அநீதிகளை இழைத்தனர். வெறும் பலவீனமான மற்றும் அடிமைகளாக இருந்த முஸ்லிம்களை மட்டும் அவர்கள் அநீதிகளுக்கு இலக்காக்கவில்லை. இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கூட மக்கத்து இணை வைப்பவர்களின் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. வரலாறு இந்த விஷயத்திற்கு சாட்சியாக உள்ளது. அவர்களும் பல வகையான கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளானார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

எனவே சீரத் ஹலபிய்யா எனும் நூலில் ஒரு சம்பவம் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத்

அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) ஆகியோர் தமது இஸ்லாத்தை வெளிப்படுத்தியபோது நவ்ஃபல் பின் அதவியா என்பவன் அவர்கள் இருவரையும் பிடித்து விட்டான். அவன் குரைஷிகளின் சிங்கம் என அழைக்கப்பட்டு வந்தான். அவன் அவர்கள் இருவரையும் ஒரே கயிற்றால் கட்டிப் போட்டான். அந்த இருவரின் கோத்திரமான பனூ தைம் மக்களால் கூட அவர்கள் இருவரையும் காப்பாற்ற முடியவில்லை. இதன் காரணமாகவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) ஆகியோர் கரீனைன் என்று அழைக்கப்படுகின்றார்கள். அதாவது இணைந்த இருவர். நவ்ஃபல் பின் அத்வியாவின் வலிமை மற்றும் அவனது அநீதியின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவை செய்து வந்தார்கள்.

அல்லாஹ்வே! اَللّٰهُمَّ اكْفِنَا شَرَّ ابْنِ الْعَدَوِيَّةِ இப்னு அத்வியாவின் தீங்கிற்கு எதிரில் நீ எங்களுக்கு போதுமானவனாக ஆகி விடுவாயாக.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 1 பக்கம் 395 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உர்வா பின் ஸுபைர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் அவர்களிடம், இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்ட மிக மோசமான நடத்தையைப் பற்றி எனக்கு கூறுங்கள் என்று நான் கேட்டேன். அப்போது அன்னார் கூறினார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது ஹராமின் ஹதீமில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது உக்பா பின் அபீ முஅய்யத் வந்தான். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கழுத்தில் துணியைப் போட்டு அன்னாரின் கழுத்தை மிக வேகமாக நெறித்தான். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அங்கு வந்து விட்டார்கள். அன்னார் வந்து உக்பாவின் தோளை பிடித்து விட்டார்கள். மேலும் அவனை இழுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அகற்றி விட்டார்கள்.

மேலும் أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ (எனது இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற நபரை நீங்கள் கொலை செய்கின்றீர்கள்) என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப் அல் அன்ஸார்... ஹதீஸ் எண் 3856)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஒரு முறை இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நீங்கள் எங்களது சிலைகளை குறித்து இவ்வாறு கூறுவதில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சூழ்ந்து கொண்டார்கள். அப்போது ஒருவர் உங்களது தோழரை காப்பாற்றுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனே புறப்பட்டார்கள். மஸ்ஜிது ஹராமை சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றிலும் மக்கள் ஒன்று கூடி இருப்பதை அன்னார் (ரலி) அவர்கள் கண்டார்கள். நீங்கள் நாசமாவீர்களாக.

أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ

وَقَدْ جَاءَكُمْ بِالْبَيِّنَاتِ مِنْ رَبِّكُمْ

எனது இறைவன் அல்லாஹ் என்றும், உங்களிடத்தில் உங்களது இறைவனிடமிருந்து தெளிவான அடையாளத்தை நான் கொண்டு வந்துள்ளேன் என்றும் கூறியதற்காக நீங்கள் ஒரு நபரைக் கொலை செய்வீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை பிடித்துக் கொண்டு அன்னாரை அடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகளான ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் (ரலி) அவர்கள் எங்களிடத்தில் எந்த நிலையில் வந்தார்கள் என்றால் அன்னார் தமது முடிகளில் கையை வைத்தபோது அவை அன்னாரின் கைகளில் வந்து விட்டன.

மேலும் تَبَارَكْتَ يَاذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ சிறப்பிற்கும், கண்ணியத்திற்கும் உரியவரே நீர் அருளுக்குரியவர் ஆவீர் என்று அன்னார் (ரலி) கூறி வந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தலையையும், அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியையும் எந்த அளவிற்கு வேகத்துடன் இழுத்தார்கள் என்றால் அன்னார் (ஸல்) அவர்களின் பெரும்பாலான அருளுக்குரிய முடி கீழே விழுந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களைக் காப்பாற்றுவதற்காக எழுந்தார்கள். மேலும்

எனது أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காகவா நீங்கள் ஒரு நபரை கொலை செய்வீர்கள்? என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ் எனது இறைவன் ஆவான் என்று கூறியதற்காகவா நீங்கள் இந்த நபரை கொலை செய்ய விரும்புகின்றீர்கள்? என்று அந்த மக்களிடம் கேட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அப்போது அபூபக்ரே! அவர்களை விட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எந்த இறைவனின் கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் குர்பான் ஆகி விடுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். அப்போது அந்த மக்கள் அதாவது நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விட்டார்கள்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 1 பக்கம் 417 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு முறை மக்களிடம் இவ்வாறு கேட்டார்கள். மக்களே! மக்களில் மிகச் சிறந்த வீரர் யார் என்று கேட்டார்கள். அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் தான் என்று மக்கள் பதிலளித்தனர். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: என்னைப் பொறுத்தவரை என்னுடன் எவர் சண்டையிட்டாரோ நான் அவருடன் நீதியுடன் நடந்து கொண்டேன். அதாவது அவரை நான் கொன்று வீழ்த்தி விட்டேன். ஆனால் மிகப் பெரிய வீரர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள் என்று கூறினார்கள்.

நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக பத்ர் போர் நாளன்று கூடாரம் அமைத்தோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை எந்தவொரு இணை வைப்பவரும் வந்தடையாமல் இருப்பதற்கு அன்னார் (ஸல்) அவர்களுடன் யார் இருப்பார்? என்று நாங்கள் கேட்டோம். அப்போது அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் எவரும் செல்லவில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வாளை ஏந்திக் கொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று விட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை எந்தவொரு இணை வைப்பவரும் சென்றடைய முடியாது. அவ்வாறு சென்றடைவதற்கு முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை எதிர்கொள்ள வேண்டும். எனவே எல்லோரையும் விட சிறந்த வீரர் அன்னாரே ஆவார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நடந்த சம்பவமாகும். குரைஷிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பிடித்து வைத்திருந்ததை நாம் பார்த்தோம். ஒருவர் அன்னார் (ஸல்) அவர்கள் மீது தமது கோபத்தை வெளிப்படுத்தி வந்தார். வேறொருவர் அன்னார் (ஸல்) அவர்களுக்கு தொல்லை கொடுத்தார். மேலும் நீர் அனைத்து கடவுள்களையும் ஒன்றாக ஆக்கி விட்டீர் என்று அந்த மக்கள் கூறினர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் எவர் வந்தாலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரை அடித்து விரட்டி விடுவார்கள். சிலரை ஏசிப் பேசி விலக்கி விடுவார்கள். மேலும் உங்கள் மீது நாசம் உண்டாகட்டும். أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ எனது இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காக மட்டுமா நீங்கள் ஒரு நபரை கொலை செய்வீர்கள்? என்று அவர்களிடம் அன்னார் (ரலி) கூறி வந்தார்கள். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது துண்டை விலக்கினார்கள். மேலும் எந்த அளவுக்கு அழுதார்கள் என்றால் அன்னார் (ரலி) அவர்களின் தாடி நனைந்து விட்டது. பின்னர் கூறினார்கள்: நான் உங்களுக்கு அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். ஃபிர்அவ்ன் குடும்பத்தின் நம்பிக்கையாளர்கள் சிறந்தவராக இருந்தார்களா? அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களா? என்று அன்னார் கேட்டார்கள். அநேகமாக ஆலி ஃபிர்அவ்னைச் சேர்ந்த தமது ஈமானை மறைத்து வைத்திருந்த நபரைப் பற்றி திருக்குர்ஆனில் இந்த வசனம் வந்துள்ளது. மேலும் அவர் ஃபிர்அவ்னின் அரசவையில் أَتَقْتُلُوْنَ رَجُلًا أَنْ يَّقُوْلَ رَبِّيَ اللّٰهُ என்று கூறிக் கொண்டிருந்தார். அப்போது மக்கள் மௌனமாகி விட்டார்கள். அநேகமாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அதன் காரணமாகவே ஆலி ஃபிர்அவ்னின் அந்த நம்பிக்கையாளரின் குறிப்பை இங்கு செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் ஒரு நொடிப்பொழுது ஆலி ஃபிர்அவ்னின் நம்பிக்கையாளரின் பூமி நிறைந்த நன்மைகளை விடவும் சிறந்ததாகும். ஏனென்றால் அந்த நபர் தமது ஈமானை மறைத்து வைத்திருந்தார். ஆனால் இவரோ அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ தமது ஈமானை பகிரங்கமாக அறிவித்து வந்தார்கள்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 20 January 2022 Issue No. 3

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் என்ற நூல் பக்கம் 38 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு கஸீரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் சம்பவங்களை பார்க்கும்போது நமக்கு இந்த வாதம் ஓர் உண்மையானதாக தென்படுகின்றது. மேலும் நமக்கு ஒவ்வொரு அடியிலும் அதுபோன்ற சம்பவங்கள் தென்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த மகத்துவமிக்க அன்பு மற்றும் பரிவின் சான்றுகளாக அவை உள்ளன. அன்னார் (ஸல்) அவர்களுக்கு மனித இனத்தின் மீது அன்பு இருந்தது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் ஏக இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக பல ஆண்டுகள் வரை அதுபோன்ற துன்பங்களை சந்திக்க நேரிட்டது. அந்த துன்பங்களுக்கு எந்த எல்லையும் இருக்கவில்லை.

ஒரு முறை கஃபத்துல்லாஹ்வில் ஒரு நிராகரிப்பாளர் அன்னார் (ஸல்) அவர்களின் கழுத்தில் துணியைப் போட்டு எந்த அளவுக்கு நெறித்தார் என்றால் அன்னாரின் கண்கள் சிவந்து வெளியே வரத் தொடங்கி விட்டன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதைக் கேட்டபோது அவர்கள் ஓடோடி சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த வேதனைமிக்க நிலையைப் பார்த்து அன்னார் (ரலி) அவர்களுக்கு கண்ணீர் வந்து விட்டது. அன்னார் (ரலி) அவர்கள் அந்த நிராகரிப்பாளர்களை விலக்கியவாறு இறைவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் எனது இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காகவா ஒரு நபர் மீது அநீதி இழைக்கின்றீர்கள் என்று கூறினார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 63, 64)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியாக இருப்பதைப் பார்த்து அன்னார் (ஸல்) அவர்களை சில எதிரிகள் பிடித்து விட்டார்கள். அன்னாரின் கழுத்தில் துணியைப் போட்டு அன்னாரின் கழுத்தை நெறிக்க தொடங்கினார்கள். அன்னாரின் உயிர் போகுவதற்கு அருகில் இருந்தது. தற்செயலாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அன்னார் (ரலி) மிகக் கஷ்டப்பட்டு அன்னாரை விடுவித்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு தாக்கப்பட்டார்கள் என்றால் அன்னார் (ரலி) மயக்கமுற்று பூமியில் விழுந்து விட்டார்கள்.

(செஷ்மா மஃரூஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 257, 258)

அடிமைகளை விடுதலை செய்ய வைப்பது தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து அறிவிப்புகளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது அன்னாரிடம் 40,000 திர்ஹம்கள் இருந்தன. அன்னார் (ரலி) அவர்கள் அதனை அல்லாஹ்வின் வழியில் செலவிட்டார்கள். மேலும் அல்லாஹ்வின் காரணமாக துன்பம் வழங்கப்பட்ட அந்த 7 நபர்களை விடுதலை செய்து விட்டார்கள். அதாவது அன்னார் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி), ஆமிர் பின் புஹைரா, ஸினீரா, நஹ்தியா மற்றும் அன்னாரின் மகள் பனீ முஅம்மலின் ஓர் அடிமைப் பெண், உம்மை உபைஸ் ஆகியோரை விடுதலை செய்து விட்டார்கள்.

(அல்அஸாபா தொகுதி 3 பக்கம் 247 அப்துல்லாஹ் பின் உஸ்மான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பனூ ஜுமைஹின் அடிமையாக இருந்தார்கள். மேலும் உமைய்யா பின் ஹல்ஃப் என்பவன் அன்னார் (ரலி) அவர்களுக்கு கடுமையான துன்பம் கொடுத்து வந்தான்.

(அல்அஸாபா தொகுதி 1 பக்கம் 283 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஈமான் கொண்டபோது அன்னாரின் முதலாளிகள் பிடித்து பூமியில் கிடத்தி விட்டார்கள். மேலும் அன்னாரின் மீது கற்களையும், பசுவின் தோலையும் போட்டு விட்டார்கள். மேலும் உமது இறைவன் லாத் மற்றும் உஸ்ஸா ஆவான் என்று கூறினர். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள், அஹது! அஹது என்று கூறி வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். மேலும் நீங்கள் எதுவரை இந்த நபருக்கு துன்பம் கொடுத்து வருவீர்கள் என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை ஏழு அவ்கியா தொகை கொடுத்து விலைக்கு வாங்கி விடுதலை செய்து விட்டார்கள். அதாவது ஒரு அவ்கியா என்பது 40 திர்ஹம் ஆகும். 280 திர்ஹம்களுக்கு விலைக்கு வாங்கினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! என்னையும் அதில் சேர்த்துக் கொள்வீராக என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நான் அவரை விடுதலை செய்து விட்டேன் என்று கூறினார்கள்.

(அத்தப்கத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 175 பிலால் பின் ரிபாஃ – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா ஒரு கருப்பர் இனத்தைச் சார்ந்த அடிமையாக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் துஃபைல் பின் அப்தில்லாஹ் பின் சஹ்பராபின் அடிமையாக இருந்தார்கள். அன்னாரின் தாயாரின் புறமிருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சகோதரராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட முன்னனி நபர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ்வின் வழியில் துன்பங்கள் கொடுக்கப்பட்டன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை விலைக்கு வாங்கி அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 31 ஆமிர் பின் ஃபுஹைரா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸின்னீரா ரோமானியர்களில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பெண்களில் முதன்மையானவராக இருந்தார்கள். அன்னார் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். இணை வைப்பவர்கள் அன்னாருக்கு தொல்லைகள் கொடுத்து வந்தனர். அன்னார் பனூ மஹ்ஸூமின் அடிமைப் பெண்ணாக இருந்ததாக கூறப்படுகின்றது. மேலும் அபூஜஹில் அன்னாருக்கு தொல்லைகள் கொடுத்து வந்தான். அன்னார் (ரலி) பனு அப்தே தார் கோத்திரத்தின் அடிமையாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது அன்னாரின் பார்வை பறிபோய் இருந்தது. அப்போது லாத் மற்றும் உஸ்ஸா ஆகிய இரு தெய்வங்களை நிராகரித்ததன் காரணமாக ஸின்னீரா குருடியாக்கப்பட்டு விட்டார் என்று அந்த இணை வைப்பவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் ஸின்னீரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அந்த இரு தெய்வங்களையும் யார் வணங்குகின்றார்கள்? என்பது கூட லாத், உஸ்ஸா அறிய மாட்டார்கள். அவ்வாறிருக்க அவர்கள் எப்படி என்னை குருடாக்க முடியும் என்று ஸின்னீரா கேட்டார்கள். அவர்களுக்கு கண் பார்வையே தெரிவதில்லை. இது விண்ணிலிருந்து நிகழ்ந்த சம்பவம் ஆகும். அல்லாஹ்வின் விருப்பத்தால் எனது பார்வை சென்றது. எனது இறைவன் எனது பார்வையை திரும்பக் கொடுப்பதற்கு ஆற்றல் படைத்தவன் ஆவான் என்று இந்த பதிலை அன்னார் (ரலி) அவர்கள் நிராகரிப்பாளர்களுக்கு கொடுத்தார்கள்.

அடுத்த நாள் இந்த நிலையில் அன்னார் காலையில் எழுந்தார்கள். அதாவது இரவில் தூங்கினார்கள். அடுத்த நாள் காலை எழுந்தார்கள். அப்போது அல்லாஹ் அன்னார் (ரலி) அவர்களுக்கு பார்வையை திரும்ப வழங்கி இருந்தான். பார்வை சரியாகி இருந்தது. அப்போது இது முஹம்மது (ஸல்) அவர்களின் மாய வித்தையின் காரணமாக நிகழ்ந்துள்ளது என்று குரைஷிகள் கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த துன்பங்களை பார்த்தபோது அன்னார் (ரலி) அவர்கள் அன்னாரை விலைக்கு வாங்கினார்கள். மேலும் விடுதலை செய்து விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 127 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இந்த நற்குறிப்பு எதிர்வரும் காலத்திலும் தொடரும். இன்ஷா அல்லாஹ். விடுதலை செய்தது தொடர்பாக மேலும் சில சம்பவங்கள் உள்ளன.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad